உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஸ்ரீ ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| | | |
|---|---|---|
| தொகுதி 7 | துன்மதிஸு தைமீ ௧௳<br>1922ஸு ஜனவரிமீ 14௳ | பகுதி 7 |


## கடவுள் வணக்கம்.

கண்ணார நீர்மல்கி யுள்ளநெக் குருகாத
கள்ளனே னானுமோ
கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே
கண்பனித் தாரை காட்டி
அண்ணா பரஞ்சோதி யப்பா வுனக்கடிமை
யானெனவு மேலெ ழுந்த
அன்பாகி நாடக நடித்ததோ குறைவில்லை
யகிலமுஞ் சிறிதறி யுமேல்
தண்ணாரு நின்னரு ளறியாத தல்லவே
சற்றேனு மினிதி ரங்கிச்
சாசுவத முத்திநிலை யீதென்று ணர்த்தியே
சகசநிலை தந்து வேறொன்
றெண்ணாம லுள்ளபடி சுகமா விருக்கவே
யேழையேற் கருள்செய் கண்டாய்
இகபா மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே.

---

பத்திநீ பத்திக் கான பலனுநீ பலவாச் சொல்லுஞ்
சித்திநீ சித்தர் சித்தித் திறமுநீ திறமார் மோன
முத்திநீ முத்திக் கான முதலுநீ முதன்மை யான
புத்திநீ யெனக்கொன் றுண்டோ பூரணா நந்தவாழ்வே.

தாயினு மினிய நின்னைச் சரணென வடைந்த நாயேன்
பேயினுங் கடைய னாகிப் பிதற்றுதல் செய்த னன்றே
தீயிடை மெழுகாய் நொந்தேன் தெளிவிலேன் வீணே காலம்
போயின தாற்று கில்லேன் பூரணா னந்த வாழ்வே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ தைமீ˚ கஉ

## பக்தி.

பக்தி என்றால் அன்பு என்றே பொருள். பக்தி, விருப்பம், வாஞ்சை, ஆசை, பிரியம், இச்சை, அன்பு, விசுவாசம் யாவும் ஒரே பொருளையுடைய மொழிகளே. குருவிடத்திலும், கடவுளிடத்திலும், மாதாபிதாக்களிடத்திலும் வைக்கும் அன்பிற்கே பக்தியென்று பெயர். இவற்றில் கடவுள் பக்தியே ஈண்டு நாம் கூறப்புகுவது.

கடவுளிடத்துச் சுயநலமாக ஒன்றையும் எதிர்பாராது அவரிடம் அத்தியந்த அன்பு வைத்தற்கே பக்தியெனக் கூறத்தகும். "ஆண்டவனே! எனக்கு உத்தியோகம் உயர்ந்தால் தங்களுக்கு அபிஷேகம் செய்கிறேன்; லாட்டரியில் எனக்குப் பணங்கிடைத்தால் அம்மனுக்கு ஒருதங்க ஒட்டியாணம் செய்து சமர்ப்பிக்கிறேன்; இவ்வருடம் வர்த்தகத்தில் எனக்கு நல்ல இலாபம் கிடைத்தால் உன் சந்நிதிதானத்திற்கு வந்து விருஷபவாகன உத்ஸவத்தையென் செலவில் நடத்திவைக்கிறேன்........." என்று இத்தகைய பிரார்த்தனைகளைச் செய்துகொண்டு காரியம் கைகூடினால், அப்பிரார்த்தனைகளைச் செலுத்துவது ஒருபோதும் பக்தியாகாது. நான் உன்னை யடையவேண்டும் என்ற ஒரு கோரிக்கை மட்டும் இருக்கலாம். மற்றபடி பக்திக்காகவே பக்திசெய்ய வேண்டும்.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி என் மனத்தே,
வழுவாதிருக்க வரந்தரல் வேண்டு மிவ்வையகத்தே:
* * * * * *"

என்றனர் அப்பர் சுவாமிகள்.

பக்தியின் பெருமை யளவு கடந்தது. மோக்ஷ மடைவதற்கு பக்தியும் சாதனையும் வேண்டும். பக்தியால் அவனது அருட்சக்தி

16 FEB 1922

ஆன்மாவில் பதிகிறது. கண்ணப்ப ரொப்ப அத்தியந்த பக்தி எல்லாருக்கு முண்டாவது அரிது. ஆதலின் நம்முயற்சியாகிய சாதனையும் வேண்டும். பக்தி யெவ்வளவுக்கெவ்வள வதிகமோ அவ்வளவுக்கவ்வளவு குறைவான சாதனையேபோதும். பக்தியாலேயே ஒருவன் ஈசுவரனுடைய அருளைப் பெறலாகும்; பக்தி ஒன்றிற்கே ஈசுவரன் வயப்படுகிறார். பக்தி யுடையோனுக்கு அடைய அரிதானது ஒன்றுமே யில்லை.

கடவுள் அன்புருவமானவர். நாம் அவரிடத்து வைத்த அன்பு மயமாய்விட்டால், ஈசுவரன் அங்கை நெல்லிபோல் விளங்கக்காணலாம். பத்தியில்லாச் சாதனையால் பயனுண்டாகாது. பக்தியின்றேல் பிரம்மானந்தம் உதியாது; ஈசுவரனுடைய அருளாகிய சக்தியே ஜீவர்களிடத்தில் கருணைவைத்துத் தநுகரணபுவனபோகங்களைத் தந்து இரட்சித்து, முடிவில் அவர்கள் தன்னிடத்தில் வந்து சேரும்படி செய்வது. இச்சக்தி பெண் சொரூபமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதனாலே ஈசுவரன் இடப்பாகத்தில் உமையம்மையைவைத்துக்கொண்டிருக்கிறார் என்று கூறப்பட்டது. இச்சக்தி அக்னியில் சூடு இருப்பதுபோல் பரமசிவத்தினிடத்தில் பிரிபடாமலிருக்கும் சத்தியாதலால் அவ்வாறு கூறப்பட்டது. இதுவே அபின்னாசத்தி என்பது. இதுவே உமை, பார்வதி, சத்தி, மாகாளி முதலிய எல்லாத் தேவதைகளுமாகும். இச்சத்தியின் அருள் பெற்றார்க்கு யாவும் எளிதில் கிடைக்கும். இதற்காகவே அப்பர் சுந்தரர் ஆழ்வாராதியர் ஆகிய சமயாசாரியர்களனைவரும்,சுவாமியைத் துதிக்கும்போதெல்லாம் அம்மனைச் சேர்த்தே துதித்திருக்கிறார்கள். எல்லா ஜீவராசிகளுக்கும், பரப்பிரம்ம சொரூபியாகிய சிவம் தந்தையும் பராசத்தியாகிய அம்மன் தாயுமாகும். நம்தேகத்திலுள்ள எலும்பு முதலியவையும் உஷ்ணமும் தந்தையின் பாகமாகும்; இரத்தம் மாமிசமாகிய ஜலபாகம் முதலியவை தாயின் பாகமாகும். பக்தியால் மோக்ஷமடைந்தோர் எண்ணிறந்தோர். கண்ணப்ப நாயனார் பக்தி வலிமையால் ஆறேதினங்களில் முத்தியடைந்தார்.

உலகில் மனைவி, புத்திரர் முதலிய மிக்க அருமையாகக் கருதப்பட்டவர்கள்மேல் வைக்கும் அன்பையெல்லாம் சேர்த்துக் கடவுளிடத்தில் வைத்து அதே பிரேமையாகி விட்டால் அது முதிர்ந்த பக்தியாகும். எப்போதோ ஒருவேளை மட்டும் சற்றுநேரம் கடவுளைச்

சிந்திப்பது பக்தியாகாது. ஒருவன் ஒரு யௌவன கன்னிகையைக் கண்டு அவள் அழகில் மயங்கி அவள்மேல் அடங்காக்காதல் கொண்டுவிட்டால், பிறகு எத்தகைய வேலை செய்துகொண் டிருந்தாலும், கோயிலுக்குள் சென்று சுவாமிசேவை செய்துகொண் டிருந்தாலும், அவன்மனம் அக் கன்னிகையையே சிந்தித்துக்கொண் டிருக்குமன்றோ; அது போன்றே தைலதாரை போலும் கடிகாரம் விநாடியைச் சத்தித்துக் கொண்டே யிருப்பதுபோலும் எத்தகைய தொழிலி லிருந்தாலும் மனம் ஈசுவர சிந்தனையிலேயே யிருத்தல் வேண்டும்.

வள்ளலார்,

"மங்கையர்தம் மேல்வைத்த மையல் தனை நூறு
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்—கங்கையணி
வேணியன்றன் பாதார விந்தத்தில் வைத்தக்காற்
காணலாம் காணுக் கதி" என்று அருளினர்.

ஈசுவரன்மேல் பக்தி செலுத்தும்போது மனம் வேறு விஷயங்களில் அலையலாகாது. ஈசுவரனை உபாசிப்பதில் இரண்டுவிதமுண்டு. (1)சகுணஉபாசனை, (2) நிர்க்குணஉபாசனை. 1-வது—கடவுளை உருவ்மாகப் பாவிப்பது, 2-வது—அருவமாகப் பாவிப்பது. கடவுளை யருவமாக உபாசிப்பது யாவருக்கும் சாத்தியமல்ல; பக்தியில் முதிர்ந்தோருக்கும் தன்னை யறியும் பக்குவ முடையோர்க்குமே அது சாத்தியமாகும்; ஆதலின் யாவரும் சகுண உபாசனையே ஆரம்பத்தில் செய்யவேண்டும். உபாசனு மூர்த்தியிடம் மனம் அழுத்தமாகப் பதியவேண்டும். சாதாரணமாகச் சாக்கிரத்தில் எதை மனம் அதிக சிந்தனை செய்கிறதோ, எதை வேறெதையும் கருதாது ஆழ்ந்து சிந்திக்கிறதோ, அதையே கனவில் காண்கிறோமென்பது யாவர்க்கும் அனுபவமான விஷயமே.

அவ்வாறு சாக்கிரத்தில் நாம் உபாசனு மூர்த்தியைச் சிந்திக்கும் பலத்தால் சொப்பனத்திலும் அதைக் காண்போமாயின், அதுவே நமக்குச் சரியான பக்தி ஜனித் திருக்கிறது என்பதற்கு அறிகுறியாகும். ஈசுவரனை யெப்போது தரிசிப்போம் என்ற வக்கம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரத்தில் ஈசுவரதரிசனம் கிடைக்கும்; இதுவே பக்திமார்க்கம்.

சாதாரணமாகப் பக்தியிலும் மற்றவற்றி லிருப்பதுபோல் சத்துவம் இராஜசு, தமசு என்ற மூன்று குணங்களுண்டு:

1. சத்துவகுண பக்தி.—இது நாம் ஈசுவரனைப் பக்தி செய்கிறோம், என்ற சங்கதி பிறர் அறியவேண்டுமென்ற எண்ணம் சற்று மின்றி இரகசியமாகவே செய்தல். இத்தகையோர் ஆடம்பர மாக மதச்சின்னங்களை யணியார்கள். தாம் பூஜைசெய்கிற தற்கு இடம், ஆசனம், முதலியவற்றைப் பகிரங்கமாக ஏற் படுத்திக்கொள்ள மாட்டார்கள்; அவர்கள் சோப்பேறிபோல் பேசாமல் உட்கார்ந் திருப்பார்களாயினும், அந்தரங்கத்தில் அவர்கள் மனமாகிய கோயிலில் இருக்கும் ஈசுவரசொரூபத் தின் சந்நிதியிலே யமூந்தி நிற்பார்கள்.

2. இரஜோகுணபக்தி.—ஆடம்பரமாக மதச்சின்னங்களை யணிதல்; உருத்திராக்கம் முதலிய வற்றிற்குப் பொற்கட்டுகள், நவரத் தினங்கள் முதலிய பதித்தணிதல்; உபாசனா மூர்த்தத்திற்கு அலங்காரம், தூபதீப நிவேதனம், சங்கு மணி ஒலித்தல் முத லிய செய்தல் ஆகிய இப்படிப்பட்ட பக்தியாகும். சந்நியாசி கள் பொன் வெள்ளி நவரத்தினங்களாலாகிய எத்தகைய ஆப ரணத்தையும் அணியலாகாது. பொன்னையும் அது உற்பத்தி யாகும் இடமாகிய மண்ணையும் சமமாகப் பார்ப்பவனே உலகை வெறுத்தவனாகும்; அதுவே சரியான சந்நியாசம் என்று நூல்கள் கூறுகின்றன.

3. தமோகுண பக்தி.—ஈசுவரனுக்கு மதுமாமிசபட்சணங்களை நிவே தித்தல், பலிசெலுத்துதல் முதலிய மூர்க்க விஷயங்க ளடங் கிய பக்தியாம்.

ஈசுவரன் வேண்டுவது வேண்டாமை கடந்தவர்; விருப்பு வெறுப்பற்றவர்; நம்மால் அவருக் காகவேண்டியது ஒன்றுமில்லை; ஆயினும் நாம் கடையினின்றும் வாங்கிவந்து நம்குழந்தையினிடம் கொடுக்கும் தின்பண்டத்தில் கொஞ்சம் அது எடுத்து நமக் கேயளித்தால், நாம் அதை ஆனந்தத்தோடு வாங்கி யுண்பதுபோல வே ஈசுவரனும் நாம் பக்தியோடு செய்யும் உபசாரங்கள் முதலிய வற்றை யேற்றுக்கொள்கிறார். அவருக்கு வேண்டியது அன்பே: அன்பின்றி எதைச் செய்யினும் பயனில்லை.

ஈசுவரனிடம் மெய்யான தைலதாரை போன்ற பக்தியும், யாவும் அவனுடையவையே; எல்லாம் அவன்செயலே என்று நம் பகமான உண்மையும் பொருந்தி யுள்ளவன் எங்கிருப்பினும்,

என்ன நிலையிலிருப்பினும், எத்தகைய உணவை யருந்தினும் அவனே ஈசுவரனுடைய அருளுக்குப் பாத்திரவானுவான்.

சமயம் வரும்போது மேலுக்கு எல்லாம் அவன்செயல் என்று கூறிவிட்டு, பிறகு தன்னுல் ஒருவருக்கு ஒருகாரியம் நிறைவேறிய போது "நானில்லாவிட்டால் அவன் தப்பிவருவதுகூட உண்டா! நான் எவ்வளவோ சாமார்த்தியமாக வேலைசெய்தல்லவோ அவனை மீட்டுவந்தேன்" என்று பெருமை பாராட்டிக்கொள்வதில் ஒரு பயனுமில்லை.

பத்திமார்க்கத்தை யனுஷ்டிக்கிறவரையில் தன்மை முன்னிலையிரண்டு முண்டு. ஈசுவரன் உபாசிக்கப் படுகிறவராகவும், சீவன் உபாசிக்கிறவனுகவும் இருக்கிறுர்கள். இதுவே துவைதநிலை; பிறகே முடிவான அத்துவித ஞானத்தை யடையவேண்டும்.

பக்தி முதிர்ந்தபோது உபாசிப்பவன் சொரூபமே அன்புருவமடைகிறது; அப்போது நான் என்ற உணர்ச்சியே அடியோடு நழுவ, முன்னிலையாயிருந்த சொரூபமும் நழுவிவிடும். பிறகு தன்மை முன்னிலையற்ற ஆனந்தமயமான ஓரே அகண்ட சொரூபமாக யாவும் விளங்கும்; இத்தகைய பக்தி யாவர்க்கும் எளிதல்லவாதலின் பக்தியோடு ஆன்மஞானம் பெறச் சாதனமும் வேண்டும். முத்தியடைதற்கு பக்தியோடு கூடியஞானம் அவசியமாதலின் மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமானவர், "ஓதரிய துவைதமே யத்துவித ஞானத்தை யுண்டுபணு ஞானமாகும்" என்றருளினுர். மாணிக்கவாசக சுவாமிகள், "அவனருளாலே யவன்றுள் வணங்கி" என்றுர். பக்தியின்றி யவனருள் கிட்டாது.

யாவரும் ஈசுரபக்தியை மறவாது அவனருள் பெற்றுய்வோமாக.

ஓம் தத் ஸத்.

---

## கல்வி, கேள்வி

இப்போது நாம் கல்வி செல்வத்தில் சிறந்ததென்பதைப் பற்றியும், அது இம்மை, மறுமைப் பயன்களை யளிக்கு மென்பதைப் பற்றியும் கூற முயலவில்லை. கல்வி என்பதுதா னென்ன? எதனுல் அது அத்துணைச் சிறப்புடையதாயிற்று, அதற்கும், கேள்விக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? என் கல்வியினும் கேட்டல் சிறந்ததாகக் கருதப்படுகிறது? என்பனவற்றை யாராயவே யிதை வரைகிறேம். கல்வியைப் பாஷைக் கல்வி என்றும், சாத்திரக் கல்வி யென்றும் இருவகுப்புகளாகப் பிரிக்கலாம்.

மனிதர் தம்மனதிலுள்ள எண்ணங்களை யொருவர்க்கொருவர் வெளியிட்டுக் கொள்வதற்காகப் பாஷை வேண்டியதாயிருக்கிறது. பாஷையென்பது சத்தமேயன்றி வேறில்லை. உச்சரிக்கும் பலவித சத்தங்கள் சேர்ந்தே ஒரு வார்த்தை யுண்டாயிருக்கிறது. பல வார்த்தைகள் சேர்ந்து ஒரு வாக்கிய முண்டாகிறது. ஒருவன் ஒரு வாக்கியத்தைக் கேட்டால், அதை மறவாமல் மனதில்வைத்திருந்து பின்னால் இன்னொருவனுக்குத் தெரிவிக்க வேண்டுமாயின், அது கஷ்டமான வேலையே. அவன் அதை மறந்தால் அதோடு அது போயிற்று. அதை யப்படிப் போக விடாதபடி பத்திரப் படுத்திவைக்கவே எழுத்துக்கள் உண்டாக்கப்பட்டன. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு சத்தத்தையே குறிக்கிறது. அதாவது, ஒவ்வொரு சத்தத்திற்கும் ஒவ்வொரு வரி வடிவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக ஏற்படுத்தப்பட்ட சில ஒலிகளைக்காட்டும் சில எழுத்துக்கள் சேர்ந்து ஒரு வார்த்தை யாகிறது. அவ்வார்த்தை ஒரு பொருளையோ, இடத்தையோ, காலத்தையோ, குணத்தையோ, உறுப்பையோ, தொழிலையோ குறிக்கிறது.

இவ்வார்த்தைகள் சமயோசிதப்படி அடையும் மாறுதல்களையும், ஒரு வாக்கியத்தில் இவை அமையவேண்டிய முறைமைகளையும், ஒன்றோடொன்று சேரும்போதடையும் விகாரங்களையும் பற்றிக் கூறுவதே இலக்கண நூலாம். அவை யியற்கையாக எவ்வாறு அமைகின்றனவோ அதற்குப் பொருத்தமாகவே இலக்கணத்தில் விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையும், வார்த்தைகளுக்குள்ளே பொருள்கள் முதலியவற்றையும் கற்பதே பாஷைக் கல்வி யென்னப்படும்.

அறிவாளிகள் அனுபவமாக அறிந்த அரிய விஷயங்களைப் பாஷையில் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளே சாத்திரங்கள் என்னப்படுகின்றன. எல்லாச் சாத்திரங்களும் மனிதனுடைய அறிவினின்றும் அவன் வாக்கு வழியாக வெளிவந்தவைகளேயாகும். ஒரு சாத்திரத்தை யொருவர் கூற மற்றொருவன் கேட்டால், அவன் அதை மனதில் தரித்துக்கொள்ள வேண்டுமாயின் பன்முறை கேட்கவேண்டும். சொல்பவர் ஒவ்வொருவருக்கும் பன்முறை கூறவேண்டும். அவ்வாறு தம் மனதிலுதிப்பதை யொருவர் கூறிக்கொண்டிருக்க முடியாது. அவர் மனதிலேயே ஒரு சமயம் உதித்தது இன்னொரு சமயம் உதியாது. அப்படி நேராமல் மனதிலுதித்ததை யுடனே என்றும் பத்திரமாக இருக்கும்படி காப்பாற்றிக்கொள்ளவே பாஷை பயன்படுகிறது. இப்போது ஒருவர் கூறிய விஷயங்களை யவர் வாக்கினின்றும் கேட்பதற்குப் பதிலாக அவர் நூலை வாசிக்கிறோம். இதனால் கேள்வியே மூலகாரண மென்றும், கல்வியும் ஒருவிதக் கேள்வியே யென்றும் தெரிகிறது. ஆனால், இரண்டிற்கும் பேதமுளது. கல்வியை வாசிக்கும்போது அதன் பொருளை நூலாசிரியரின் கருத்துப்படி யுணா

வேண்டும். அதில் ஒரு சந்தேக முண்டானல் பிறரைக் கேட்டே அதைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். நூலில் கூறப்பட்டிருப்பது எல்லாத் தாரத் தவர்க்கும் (சூக்கும புத்தி யுடையோர், மந்தர் யாவர்க்கும்) ஒரேமாதிரி தான். இக்காலத்தில் சிலர் ஆன்ருேர் நூல்களுக்கு உரை கூறுவோர் நூலா சிரியர் கருத்தை யுணாமுயலாமல் தமது மதச் சித்தாந்தப்படி வியாக்கி யானம் செய்கின்றனர்.

கற்ற ஒருவரிடம் கேட்பதாயின், அவர் கேட்பவன் புத்தித் தாரத்தின் படி போதிப்பதோடு, அப்போதைக் கப்போதெழும் ஐயங்களை யுடனுக் குடன் களைந்து அறிவு விளங்கச் செய்வார். கல்வியில் ஆன்ருேர் வெளி யிட்டுள்ள அரிய விஷயங்களை யெல்லாம் உணர்ந்து இருமைப் பயனையு மடைகிருே மாதலின் கல்வி அத்துணைச் சிறப்புடையதாயிற்று. ஆனல் கேள்வி அதனினும் சிறப்புடைத் தென்பது மேல் கூறியவாற்ருல் விளங்கு கிறது. அதனுனே பொய்யா மொழியாரும்,

“ செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை ”

“ ஒருவருக்குச் செவியால் வரும் செல்வமே சிறப்புடைய செல்வம் ! அச்செல்வம், பிறசெல்வம் எல்லாவற்றினும் தலையானது. ஏனெனின் கேள்வியில் எல்லாப் பொருள்களையு மறிகிருேம். பொருளால் வரும் மற்ற செல்வங்களனைத்தும் நிலையானவை யல்ல ; அதோடு துன்பம் விளைவிப்பன வாம். ஆதலின் செவியால் வரும் கேள்விச் செல்வமே எல்லாச் செல்வங் களிலும் சிறந்ததாம் ” என்று கூறி யருளினர்.

ஒரு காலத்தில் அநாதியான நமது வேதம் எழுதப்பட்டிராமல் சத்தம் [சுரம்]மாத்திரமாகவே யிருந்தது. அதனுனே வேதத்திற்கு “ எழுதாக் கிளவி ” யென்ற ஒரு நாமமுமுண்டு. நமது மதம் என்றும் அழியாத இயற்கை யுண்மையையே அஸ்திவாரமாகக் கொண்டது. அவ்வாறே நம் முன்னேர் ஏற்படுத்திய ஆசாரங்களைப் பற்றிய விதிகள், அவர்கள் உதவிய அரிய சாத்திரங்கள் யாவும் இயற்கை யுண்மையின் அநுபவத்திலிருந்தே வெளிவந்தன.

நமது தெய்வீகம் பொருந்திய அமுத மொழியாகிய தமிழ்ப் பாஷை யின் எழுத்துக்கள் அமைக்கப்பட்டதும் அவ்வாறே. நாம் வாயைத் திறந்த தும் இயற்கையாக உண்டாகும் சத்தம் “ அ ” என்பதேயாகும். அதுவே எல்லாச் சத்தங்களுக்கும் ஆதியாகும். “ அகரமுதல வெழுத்தெல்லா மாதி-பகவன் முதற்றே யுலகு ” என்றனர் பொய்யா மொழியார். ‘ அ ’ கரமே பிரணவத்தின் முதலெழுத்தாகவிருந்து பரம்பொருளைக் குறிக்கிறது. மந்திரங்களுக்கெல்லாம் இதுவே யாதி எனலாம். பிரணவாக்ஷரமே இவ்வாறு அமைந்துள்ளது. ஆங்கில பாஷையில் எழுத்தொன்ரு யிருப்பின் உச்சரிப்

பொன்று யிருக்கும். தமிழ்ப் பாஷையிலோ எல்லா உச்சரிப்புக்களுக்கும் தக்கபடி எழுத்துக்கள் அமைந்திருப்பதால் எழுத்துக்களின்படியே உச்சரிப்பும் இருக்கிறது. இதில் வார்த்தைகள் ஒன்றேடொன்று சேரும்போது, தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய விகாரங்களை யடைந்து செவிக்கினிமை பயக்கும் வண்ணம் ஒன்றேடொன்று இயைந்துகொள்ளும். இலக்கணத்தில் இவற்றிற்கு விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்தில் வார்த்தையோடு வார்த்தை சேர்வதில்லை. மேலும் மனிதருடைய மனோ நிகழ்ச்சிகள் எவ்வளவுண்டோ அவ்வளவையும் காலத்திற்கும், இடத்திற்கும் தக்கபடி வெளியிடும் அரிய நூல்கள் (புற நானூறு முதலியவை) வேறெந்தப் பாஷைகளிலும் இருப்பதாகக் காணப்படவில்லை.

ஆயினும், இத்தகைய இலக்கிய இலக்கணக் கல்வி மட்டும் ஒருவனுக்கிருப்பின் அது அவனுக்கு அகங்காரத்தை யுண்டாக்குகிறதன்றி அவன் நடக்கைகளையும், குணங்களையும் சீர்திருத்துவதில்லை. "கற்றதும், கேள்வி கேட்டதும், நின்னைக் கண்டிடும் பொருட்டன்றே காணே" என்று தாயுமான சுவாமிகள் அருளியபடி ஆண்டவனருள் பெறும் நோக்கத்தோடு அதற்குரிய நூற்களைக் கற்கும் கல்வியே ஆணவமாகிய இருளை நீக்கி அகங்காரத்தை யழித்து மெய்ஞ்ஞானத்திற்கு வழி காட்டியாகும். அக்கல்வியே அடக்கம், சாந்தம், பக்தி முதலியவற்றை யளிக்கவல்லது. இதற்குக் கேள்வி யவசியம் வேண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் அஞ்ஞானத்தை யொழித்து ஞானத்தை நல்கும் இக்கல்வியைக் கற்க முற்படவேண்டும். இதுவே மானிடஜன்ம மெடுத்ததனு லடையவேண்டிய பயனாகும்.

ஓம் தத் ஸத். சீடன்.

---

## ஒப்புரவொழுகு.

'ஒப்புரவொழுகு' என்று இப்பூவுலகில் மானிடராய்ப் பிறந்த நாமெல்லாரும் உலக நடையினை அறிந்தொழுகிப் பொதுவாக எல்லார்க்கும் பயனளித்து அதனால் பெறற்குரிய புகழை யடையுமாற்றை நல்லிசைப் புலவராகிய ஔவையார் சுருங்கவைத்து விளங்கக் காட்டியுள்ளார். இவ்வாறு ஔவையார் கூறியவாறே, தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், தம் அருமைத் திருக்குறளில் ஜன சமூக வாழ்க்கைக்கு வேண்டப்படும் பொதுநன்மைக்கு 'ஒப்புரவறிதல்' என்னும் பெயரிட்டு, அதனைப் பத்துக் குறள்களால் ஓரதிகாரமாக வைத்து விளக்கியருளினர். வள்ளுவனார் உலகத்தார்க்கு இன்றியமையாது அறிவுறுத்தற்குரிய விஷயங்களை முப்பாலாகத் தொகுத்து, அம்மூன்றனுள் ஒவ்வொன்றையும் பற்பல அதிகாரங்களாக விரித்துரைத்தா ரென்பது யாவரும் அறிந்த விஷயம். அம்மூன்று பகுதியுள் முதலதாகிய அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல் என இரு பான்மைப்படும். இல்லறவியல் இல்வாழ்க்கை முதலாகப் புகழீருகப் பத்

தொன்பது அதிகாரங்களை யுடையது. இப்பத்தொன்பதனுள் 'ஒப்புர வறிதல்' என்பது மொன்று. ஒப்புர வென்னுஞ் சொல் உபகாரம், ஒற் றுமை, சமாதானம் ஆகிய பொருளை யுணர்த்தும். ஆனால் தெய்வப்புலவர் திருக்குறளில் எக்கருத்தில் அதை யுபயோகித்துள்ளார் என்பது நாம் இங்கு ஆராயவேண்டிய தவசியம். ஒப்புரவறிதல் என்னு மதிகாரத்துக்கு உரை யாசிரியராகிய பரிமேலழகர் முகவுரை கூறவந்தவிடத்து ஒப்புரவறிதல் என்பதற்கு "உலக நடையினை யறிந்துசெய்தல்; உலகநடை வேதநடை போல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே யறிந்துசெய்யுந் தன்மைத் தாகலின் ஒப்புரவறிதல் என்றார்" என வுரைத்துள்ளார்.

இவ்வாறு 'உலக நடையினை யறிந்து செய்தல்' என்று அவ்வுரை யாசிரியர் பொருள் கூறுதலால் ஆன்றோர் ஒழுகியவாறு ஒழுகல் என்பதை அவ்வுலக நடையென்று நாம் கருதுவோமானால் ஒப்புரவறிதலென்ற அதி காரத்துவரும் எக்குறளேனும் அவ்வொழுக்கத்தைப்பற்றிக் கூறாமையாலும், உயர்ந்தோ ரொழுக்கத்தை மேல்வரிச் சட்டமாக வைத்து ஒழுகுதலை 'ஒழுக்கமுடைமை' யென்னும் அதிகாரத்துள் "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்—கல்லா ரறிவிலா தார்" என்ற குறளில் விளங்குத லானும், உரையாசிரியரும் அதற்கு விசேடவுரை கூறவந்தவிடத்து "உல கத்தோடு பொருந்த வொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற் றான் ஒழுகுதல்— ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல்" எனக் கூறுத லானும் அது கருத்தாகாதென்பது பெறப்படும்.

இனி 'ஒப்புரவறிதல்' என்ற சொற்றொடருக்குப் பொருள் யாது? ஆசிரியர் கூறிய 'உலக நடையை யறிந்துசெய்தல், என்பதில் உலக நடை யென்னுந் தொடர்க்கு ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத உதவிகளை யறிந்துசெய்தலென்று ஒவ்வொரு திருக்குறளும் விளக்கிநிற்றலால் கருத லாகும். ஜனசமூக வாழ்க்கையாவது தோட்டிமுதல் தொண்டைமானீறாக வும், துறவிமுதல் பற்றே மிக்கவ னீறாகவும், வீரன் முதல் பேடி யீறாகவு முள்ள மானிடரெல்லாம் பரஸ்பர வுதவியானேவாழும் நிலை.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை" என்பதனால் துறவிக்கும் இல்வாழ்வானது துணை இன்றியமையாதென்று பெறப்படும். அவ்வாழ்க் கையின் வளர்ச்சிக்குரிய உபகாரங்களாவன: குளங்கட்டுவித்தல், கல்லூரி யேற்படுத்தல், வைத்தியசாலை செய்வித்தல், ஒழிக்கத்தக்கன ஒழித்தல் முதலியனவும் பிறவுமாம்.

'கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை' என்னுங் குறளில் 'உலகியல்' என்பதற்கு உலகநடை யெனப் பொருள்கூறி, விசேட வுரையில் உலநடை யாவது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தலெனப் பரிமேலகழகர் கூறிப் போந்தமையால் உலகநடை யென்பது உயர்ந்தோர் ஒழுக்கம் என்னும் பொருளில் வழங்கவில்லை யென்பது புலப்படும்.

இவ்வுலக நடைக்குரிய உதவி ஒருவாறு முறையாக நடைபெறுவதாயினும், மக்களிற் சிறந்தவன் தன் அரிய பெரிய ஆற்றலால் பிறர்க்குப் புரியுஞ் சிறப்பையே கூறிப் பொருளால் மட்டுமன்றி மனமொழி மெய்களால் செய்யப்படும் எல்லா உதவிகளையு மடக்கிக் கூறியுள்ளார் நம் நாயனுர். தவிர பரிமேலழகர் 'ஒப்புரவு இம்மையில் பயனளிப்பதாகலின்' என்று கூறிய வாற்ருனே இன்றியமையாதது என்று கவனிக்கத் தக்கது. ஒப்புரவின் பெருமை:—

'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்' எனச் சான்ருண்மைக்கு ஆதரவானவைகளில் ஒன்ருக வைத்துக் கூறுதலால் ஒப்புரவின் பெருமை விளங்கும்.

"மக்களாலாய பெரும் பயனும் ஆயுங்கால்
எத்துணையும் ஆற்றப் பலவாருல்—தொக்க
உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்" என்ற நாலடியின் கருத்தொத்து நன்மைகள் உடல் வளர்ப்பது அறப்பகுதியன்று. தன்னுடைய நன்மையைக் கருதாது பிறர் மேம்படுத்தற் கானவைகளைச் செய்வது ஒப்புரவு என்பதாம். ஒப்புரவொழுகும் விழுமியோர்.

"தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் * *"

அவர் 'உளவரையால் செய்வர் செயற்பாலவை' என்னில்,

"உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்" என்ருலும் அவர்கள் "செல்வம் பலர்க் காற்றிக் கெட்டுவந்தக் கண்ணும், சிலர்க் காற்றிச் செய்வர் செயற்பாலவை"

"அடர்ந்து வறியராய் ஆற்ருத போழ்தும்
இடங்கண் டறிவாமென் றெண்ணி யிராஅர்
மடங்கொண்ட சாயல் மயிலன்னுய் சான்ருேர்
கடங்கொண்டுஞ் செய்வார் கடன்."

இக்கடப்பாடு கைம்மாறு நோக்குவதல்ல; தவிருந் தன்மையதல்ல; ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின், அக்கேட்டைத் தன்னை விற்ருயினுங் கொள்ளுந் தகுதியை யுடைத்து. வறுமையால் இது ஒழிதற்பாற்றன்று.

வேதநடை வழுப்போன்று இவ்வுலகநடை வழு தீர்திற னுடைத்தன்று. பிறர்க் குதவாதார் போலத் தாமே உண்டற்பொருட்டும், வைத்திழத்தற் பொருட்டு மல்லாமல் பொருள் முழுதும் ஒப்புரவு செய்தற் பயத்தது.

இக்கடப்பாடு தன்னைப் பற்றியதும், தன் குடியைப் பற்றியதும், நாட்டைப் பற்றியதும், மன்பதைகளைப் பற்றியதும் எனப் பல திறத்தது. இது நாட்டுக்கு நாடு வேறுபடுதலும், காலத்துக்குக் காலம் வேறுபடுதலும் கூடும். அதனால் அறநூல்கள் இதைக் குறிப்பிட்டுக் கூறுவதில்லை. அவ்வந்நாட்டில் அவ்வக்காலத்தில் உள்ள மேலோர் மேற்கொள்ளும் முறைகளைக் கண்டறிந்து ஏனையோர் கொள்ளத்தக்க கடப்பாடாதலின் திருவள்ளுவரும் இதைப் பொதுப்படக் கூறிப் போந்தார். இனி ஒருவன் எத்தகைய செல்வத்தை உடையனாயினும் ஒப்புரவைக் கடைப்பிடியாமல் விருப்பனேல் அவன் உலகிற் செத்தவனே யாவனென்றுங் கருத்து.

"ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்" என்னுங் குறளால் அறியலாகும்.

இனி இவ்வொப்புரவு ஈகைபோல வறியார்க்கு மட்டுமன்றி, ஜனசமூகத்திற்கே பெரும்பய னளிப்பதாதலாலும், அவன் பெற்ற செல்வம் பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவுதலாலும் அது "ஊருணி நீர் நிறைந்தற்று." எல்லார்க்கும் எளிதிற் பயன் கொடுத்தலால் அது 'பயன் மரமுள்ளூர்ப் பழுத்தற்று' தன் குறை நோக்காது எல்லார் வருத்தமுந் தீர்த்தலால் அது "மருந்தாகித் தப்பாமரத்தற்று" இன்னோரன்னோரே கடப்பாட்டாள ராவர்.

இனி இவ்வொப்புரவு செல்வத்தான் மட்டுமாவதன்று; மனமொழி மெய்களாற் செய்யப்படும் எல்லா உதவிகளையும் குறிப்பதென்னுங் கருத்து.

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்"

"நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு" என்னுங் குறள்களில் அமைக்கப்பட்டது.

ஆகவே இதுகாறுங் கூறியவாற்றால், ஜனசமூக வாழ்க்கைக்கு வேண்டப்படும் பொது நன்மைக்கு ஒப்புரவென்றும், வேளாண்மைக்கு ஒப்புரவென்றொரு பெயரென்றும், ஒப்புரவு கடப்பாடு என வழங்கப்பெறுவதென்றும், ஒப்புரவறிதல் என்பது உலகநடை யறித லென்பதென்றும், ஒப்புரவொழுகென்றால் உலக நடையை யறிந்து உலகத்துக்கு வேண்டிய உபகாரத்தைக் கருதிச்செய்து ஒழுகவேண்டு மென்றும், ஒப்புரவின் பெருமையின்னதென்றும், ஒப்புரவு இம்மையில் பெரும் பயனையும் புகழையும் பயப்பதென்றும், பொருளானேயன்றி மனமொழி மெய்களாலும் ஒப்புரவு செய்யத்தகு மென்றும் அறியப்படும்.

M. E. வீரபாத் பிள்ளை.
இராயபுரம், சென்னை.

# தமிழின் பெருமையும், தற்கால நிலைமையும்.

நம் தாய்நாடு நீர்வள நிலவளம் பொருந்திச் சதாகாலமும் ஜீவநதிகளால் பாயப்பெற்று உலகத்திலுள்ள மற்றெல்லாப் பாகத்தைக் காட்டிலும் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும் ராஜரீக விஷயங்களிலும், முதன்மைபெற்று விளங்கின தென்பது மிகைபடாது. இந்நாடு தேசபக்தி, சமயபக்தி, பாஷாஞானமுள்ள அநேக புண்ணியவான்களுக்கு உறைவிடமாயு மிருந்தது.

நம் நாட்டில் அநேக பாஷைகள் பேசப்படுவதும் ஓர் பெருஞ்சிறப்பேயாகும். ஏனெனில், புதிது புதிதாய் மாறி மாறி இன்பம் அனுபவிக்க எண்ணுவது மனிதர் இயல்பு. பக்தர்கள் பலர் ஒன்றுசேர்ந்து கூடித் தோத்தரிக்கும்போது ஒரேபண்ணையேகொண்டு துதித்தால் அது அவ்வளவு ஆனந்தம் தரத்தக்கதல்ல வென்று பல பண்களைக்கொண்டு தங்கள் மனமுருகிக் கேட்போர் மனம் ஓர் நிலையில்நின்று கடவுளின்உருவத்தை அம்மனமெனும் கோவிலில் நாட்டத் தியானிக்கும்போது உண்டாகும் களிப்பு அளவிடத் தரமல்ல. இக்காரணத்தாலேயே நம் நாட்டில் நம் இந்துமாதாவைப் பல பாஷைகளில் துதிக்கிறோம். சிலர் இங்கு பல பாஷைகள் வழங்குவதை அறியாமையால் அது ஓர்குற்றமெனக் கருதுகிறார்கள். நம் இந்தியமாதாவின் உதரத்தில் உதித்த நம்சகோதரர்கள் எப்பாஷையைப் பேசினும் தேசபக்தியிலும், அன்பிலும் இவர்கள் அயல்நாட்டாரைப் பின்னிட்டவரல்லர். ஆகையால் நாட்டில் பல பாஷைகள் ஆங்காங்கு காணப்படுவது அத் தேசத்திற்கு ஓர் பெருமையெனவே மதிக்கவேண்டும். ஏனெனில் ஒரே பாஷையில் வல்லவனை உலக மதிப்பதைவிடப் பல பாஷைகளில் தேர்ந்த மற்றொருவனை உலகம் மிகவும் மதிக்கிறதே இதற்குத் திருட்டாந்தம்.

பல இடங்களிலுமுள்ள அனுபவங்களையும் அறிவையும் விர்த்திசெய்யக் கூடிய கண்காக்ஷி சாலையிலுள்ள பொருள்கள் மனதிற்கு எவ்வளவு ஆனந்தம்கொடுக்குமோ அதைவிடப் பன்மடங்கு ஆனந்தத்தை நம் நாடுகொடுத்து உலகத்தில் சிரேஷ்டமாம், எல்லாச் செல்வத்தையும் தன்னிடத்தே அடக்கி இவ்வுலகத்தோர் மனதை ரமிக்கச்செய்கிறது. நம் தேயத்தின் புராதனசரித்திரங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து நாம் பொதுவாய் ஆராயுமிடத்து தமிழ் ஒரு தனிப்பாஷையெனவும், தமிழ் நாட்டரசர்கள் சேர, சோழ, பாண்டியரெனும் மூவரெனவும், இவ்வரசர்களின் இராஜ்யம் வடக்கே கங்காநதிக்கப்பாலும், தெற்கே கன்னியாகுமரி வரையிலும், இலங்கைத்தீவிலும் பரவி இருந்ததாகவும் தெரிகிறது. பாண்டிய அரசர்கள் ஆதிகாலத்திலே "க்ரீஸ், ரோம்" முதலிய தேசத்தரசர்களை அறிந்திருந்தார்கள். தமிழ்ப் புலவர்கள் நன்கு சன்மானிக்கப்பட்டு மதபேத மின்றி எல்லா மதத்தாரும் பழகித் தமிழையாவரும் பரிபாலித்தார்கள். அரிய, பெரிய

மகான்களால் சமய சித்தாந்த சாஸ்திரங்களும், கிரியை, யோகம், ஞானம் முதலிய மார்க்கங்களைக் காட்டும் நூல்களும், இன்னும் வானசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், கணிதசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், கிருஷிசாஸ்திரம், முதலிய அரிய பெரிய நூல்களும் நம் தாய்ப்பாஷையில் எழுதப்பட்டன. இப்பாஷை நம் மிந்தியாமட்டிலுமல்லாமல் அதை அடுத்த லங்கை, சுமத்திரா, ஜாவா, முதலிய தீவுகளிலும் தழைத்தோங்கியது. இப்பாஷையில் எவ்வபிப்பிராயத்தையும், எத்தோற்றத்தையும், எவ்வித தாத்பரியங்களையும் வெளியிடக்கூடிய சொற்கள் சிறந்துள்ளனவெனச் சொல்வதில் ஐயமில்லை. இப்படி இருக்க நாகரீகமிகுத்து நவிலும் நம் நாட்களில் அனேக அன்னிய பதங்களுக்குத் தகுந்த பொருளைக் கொடுக்கும் பதங்கள் நம் தாய்ப்பாஷையில் காணப்படுவதில்லை யென்று ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட பல சாஸ்திரங்களை அப்பாஷையிலேயே படிக்கவேண்டுமென்பது எவ்விதம் பொருந்தும்? மனமுண்டானல் வழியும் தோன்றும்.

தொன்று தொட்டு மேன்மையுடன் விளங்கிய நம் தாய்ப்பாஷையை விசுவசித்து அதை உன்னத நிலைமைக்குக் கொண்டுவர வேண்டியது நமது கடமையல்லவா? தேசாபிமானம் எப்படி முக்கியமோ, அப்படியே பாஷாபிமானமும் முக்கியமாகும்.

நமது சுயபாஷையில் பயிற்சி இல்லாவிடில் நமது தேச சரித்திரங்களையும் நமது பெரியோர்களின் பெருமையையும் நாம் எப்படி உள்ளவாறு அறியக்கூடும். நாம் அன்னிய பாஷைகளைப் பயின்று நம் தாய்ப்பாஷையை விட்டு விடுவது நியாயமா? நமது அழகிய இல்லத்தை அலங்கரித்து அதன் அழகைப் பாராமல் அன்னியர் குடிசையை அரண்மனையென மதித்தல் என்ன பலன் விளைக்கும்?

சுயபாஷாபிமானிகளே! நம் தாய்ப்பாஷையைக் கற்றுக்கொண்டு நம் முன்னோர்களின் நாகரீகங்களை நன்குணர்ந்து அப்பாஷைகளின் சாதனங்களோடு பிறர் பாஷைகளைக் கற்றுக்கொள்வது மேன்மையென நன்குணர்ந்து தமிழ்கற்றோரும் ஆங்கிலம் கற்றோரைப் போலவே ஒத்துழைத்து நம் தேயத்தைச் சிறப்பிக்க வேண்டியது நமது கடமையாகும்.

நம் கவிகளை நாம் தவிக்கவிடுவது நமது கௌரவத்திற்குச் சற்றும் பொருந்தாது. அந்தோ! நம் மூதாதையர் எழுதிய நூல்களெல்லாம் இருட்டறையில் இடந்தெரியாது சிறையிடப்பெற்றுக் கறையானல் சிதைக்கப்பெற்றுக் கசிந்து பொடியாய் மண்ணுடன் சேரவிடுவது விலைமதிக்கத் தகாத மாணிக்கத்தைச் சமுத்திரத்தில் எறிவதற்கு ஒப்பாகுமன்றோ? தமிழை ஆதாரமாகக்கொண்டு அநேக பாஷைகள், உற்பத்தியாயிருக்கின்றன வென்பதை விளக்க "மனோன்மணியின்" ஆசிரியர் பின்வரும் மொழிகளைப் பாடி யிருக்கிறார்:—

" பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்தே செயல்மறந்து வாழ்த்துவமே. "

இவ்வளவு மகிமையுடன் விளங்கிய நம் தாய்ப்பாஷை மிகவும் க்ஷீணித்திருப்பதற்குக் காரணம் என்ன? நமக்கிப்போது கொடுக்கும் தாய்ப்பாஷையின் அறிவு நமக்குப்போதுமானதாயில்லை. தலைக்குத்தகுந்த தலைப்பாகையை நாம் தேடுவோமே யொழியத் தலைப்பாகைக்குத் தகுந்தமாதிரி நம் தலையைச் செய்துகொள்ள விரும்புவதில்லை; அம்மாதிரியே நமக்கு அத்தியாவசியம் வேண்டுவதும் அனுகூலத்தைத் தரத்தக்கதுமான கல்வியையே நாம் பெறவேண்டும். நாம் படிக்கும் படிப்பெல்லாம் வாய்ப்படிப் பாய்விட்டது. அந்தரத்தே வளரும் செடிகளுக்கு எம்மாதிரி வேரூன்றி வளரும் சக்தி இல்லையோ அம்மாதிரியே நம் தாய்ப்பாஷை செழித்துவளர முடியாத ஸ்திதியில் இருப்பதற்குக் காரணம் நாமே. நம் தாய்ப்பாஷையின் பேரில் நமக்கு அபிமானமிருக்கும் பக்ஷத்தில் அது கீர்த்தியுடன் விளங்கத் தக்க வழியை நாமே தேடிக்கொள்ள வேண்டும். நாம் தாய்ப்பாஷையை மறந்து ஹிந்துஎன்று சொல்லிக்கொள்ளவும், ஆங்கிலேயரெனச் சொல்லவும் முடியாது. பிறருடைய கொள்கைகளைத் தழுவி நடுக்காட்டில் அகப்பட்ட வழிப்போக்கன்போல் விழிக்கவேண்டி யிருக்கிறது. நமது பின்னிலையில் பலர் நம்மைப்பேசினும் ஏசினும், நாம் நமது கடமையை நம் நண்பர்களுக்கு எடுத்துரைப்பதே நன்னிலையாகக் கொண்டு அவர் முன்னிலையில் எடுத்துரைக்க முன்வரவேண்டும்.

நாம் நாட்டிலுள்ள சண்பகம், பகுளம், பாரிஜாதம் முதலிய புஷ்பச் செடிகளையும், மாஞ்சோலைகளில் மனதிற்கு இன்பத்தைத்தந்து பாடும் பக்ஷிகளையும், அசோகம், முதலிய செடிகளையும்பற்றி நாம் கேட்டதுமில்லை; பார்த்ததுமில்லை. கமுகு, மா, பலா, முதலிய விருக்ஷ வரிசைகளை யுடையதாய் மனதைக்களிப்பிக்கும் மாஞ்சோலைகளும், கண்களைக் கவரவல்ல கனிவர்க்கங்களுடன் காண்போர் விரும்பும்படியுள்ள தோப்புகளும், விசித்திரமண்டபங்களுடைய அநேக பட்டணங்களும், வில்வித்தை, வாள்வித்தையில் தேர்ந்தவரும், கண்ணிமைப் பொழுதையும் விடாது கணித்துப் பலனைக் கூறும் ஜோதிடர்களும், நம் முன்னோருடைய மாக்ஷிமையும் ஆகிய இத்தகையவற்றை எடுத்துக் கூறும் புத்தகங்கள் அரிதாயின. நாம் பள்ளிக்கூடங்களின் வாசிக்கும் புத்தகங்களில், பெரும்பாலும், ஆங்கில நாட்டில் நடந்த விசேஷ சம்பவங்களைப் படிக்கிறோமே யல்லாது, நம் நாட்டில் கீர்த்திபொருந்திய சீதை, சகுந்தலா எனும் ஆயிரக்கணக்கான ஸ்திரீரத்தி

ஙங்களின் சரிதையையும், வீரமுள்ள போர் வீரர்களின் செயல்களையும் காணேம். நன்றியறிவுள்ள உண்மையான தேசாட்புள்ள தேசாபிமானிகள் சரிதையும் நம்மால் காணப்படுவதில்லை.

இப்போதைய படிப்பில் நாம் சில வருஷங்கள் பாடசாலைகளில் நம் வாலிபத்தைக் கழித்துக் குறுகிய அறிவைப்பெற்று, எவ்வித்தையிலும் பரிபூரணமான ஞானமில்லாது நுனிப்புல்லை மேய்வதுபோல் பல சாஸ்திரங்களையும் ருசிபார்த்துவிட்டுப் பேனு ஓட்டும் திறமையை அடைகிறோம். பிள்ளைகள் பாடசாலையில் சில வருஷங்கள் படித்தபின்னர், ஸ்திரமான ஓர் கைத்தொழிலைச் செய்யப் பழகிக்கொண்டா லொழிய அவர்களுக்கு அவ்வித்தையினல் பலப்பிரயோஜனம் ஒன்றுமில்லை; அல்லது ஒவ்வொரு மாணவனும் தன் பாடசாலையில் படிக்கும்போது தன் தாய்ப்பாஷையில் விசாலமான அறிவைப்பெற்று அப்பாஷையிலுள்ள பல நூல்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிய ஞானத்தையாவது பெருக்கிக்கொள்ள வேண்டும். தாய்ப்பாஷையில் அபிமானமுள்ள ஒவ்வொருவனும் மற்றபாஷைகளில் ஏதாவது ஓர் துறையில் அறிவைப் பெறுமுன்னமே, தன் தாய்ப்பாஷையில் ஒரு நூலையேனும் பூரணமாகக் கற்கவேண்டும்.

மகாத்மா காந்தி தேசபாஷாபி விர்த்தியே தேசாபிவிர்த்தியென்கிறார். திலகர் பெருமானுக்கும் இந்திய கவிச்சக்கிரவர்த்தியாகிய இரவீந்தநாதடாகூருக்கும் தாய்ப்பாஷையிலுள்ள அன்பு அளவிடமுடியாதது. அவர்கள்சென்ற இடங்களிலெல்லாம் தம் தாய்ப்பாஷையே பேசுவதேயல்லாது அன்னிய பாஷையே உபயோகிப்பதில்லை. பிந்திச்சொன்னகவி வங்காளத்தில் ஆழ்ந்த கருத்துள்ள புஸ்தகங்களை வெளியிட்டிருக்கிறார்; தென்னுட்டில் பாஷாபிமானம் குன்றி இருப்பது விசனிக்கத்தக்கது; தமிழ்நாட்டுக் கல்வியென்றால் ஆங்கிலக்கல்வி யென்று பொருள் கொள்பவர் அனேகர். தமிழ்வல்லவரைப் போற்றுவர் அரிதாயினர்.பலர் முன்னிலையில்தமிழ்பேசுதல் அகௌரவமென எண்ணுவாரு முளர்; எனக்குத் தமிழ்பேச வராதெனப் பெருமைபேசுவார் சிலர்; கற்றோரென்றால் ஆங்கிலம் கற்றோரெனப் பொருள்கொள்வாருமுளர்.

சென்னைச் சர்வகலாசாலையில் நமது தமிழைக் கட்டாயப்பாடங்களிலொன்றாக வைக்காமல் இஷ்டபாடமாக வைத்ததும் நமது அதிஷ்டமே. ஆரம்பவகுப்புக்களில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலியவை பாடமாயிருந்தன. லோயர்சகண்டரி வகுப்புக்களில் இன்னு நாற்பது, நீதிவிளக்கம் முதலியவை பாடமாயிருந்தன; மெட்ரிகுலேஷன்வகுப்புக்குப் பெருந்தேவனர் பாரதம்,கம்பராமாயணம் முதலிய அரிய நூல்களும், நன்னூலும் போதிக்கப்பட்டன. இக்காலத்து மாணவர்களுக்குக் கொன்றைவேந்தன், ஆத்திசூடி என்ற பெயரே தெரியாது. “கைவீசம்மா கைவீச” “நிலாநிலா ஓடிவா” “பனைமரமே பனைமரமே,

என் வளர்ந்தாய்" என்னும் போலிப்பாட்டுகள் காலியாயுள்ள சிறுவர்கள் மனதில்நுழைந்து அவர் அவர் மனதைக்கலக்குகின்றன. பாட்டுகள் போலிப் பாட்டாக மாறப் போலிப் புலவர்களும், புஸ்தகங்களும் அபிவிர்த்தியாய் அவைகள் பாடப்புத்தகங்களாய் அமைக்கப்பட்டன.

மனிதனுக்கு இருக்கவேண்டிய பொதுக்குணங்களில் முக்கியமானவை மூன்று. அவை பாஷாபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம். எவரிடத்துப் பாஷாபிமானம் உளதோ அவரிடத்தே மற்ற இரண்டுங் குடிகொள்ளும். பாஷாவளர்ச்சி தேசவளர்ச்சிக்கும், சமயவளர்ச்சிக்கும் காரணமாயிருக்கிறது. ஆங்கிலம் இங்கிலாந்திற் குரியது. அங்கு அந்நாட்டிலன்றி ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட தேசங்களிலும் பாவியிருக்கிறது. அம்மொழி எங்கெங்கு பாவியிருக்கிறதோ அங்கங்கே ஆங்கிலேயர் தம் வழக்க ஒழுக்கங்களை நழுவவிடுவதில்லை. பொதுவாக இந்தியர்களில் சிலர் உபன்யசிக்கும்போது மேல்நாட்டுக் கவிவாணர் உரைகளை மேற்கோளாக எடுத்துக்காட்டுகிறார்கள். அவர் தம் உள்ளம் ஆங்கிலமாக மாறியிருக்கிறது. நடை, உடை, பாவனையும் அவ்வாறே. ஆங்கிலேயர் முறைப்படி எவ்வளவு பேர் உணவுகொள்ள எத்தனிக்கின்றனர். மனைவியையும், குழந்தைகளையும் ஆங்கில வழக்கப்படி அலங்கரித்து ஆனந்தம் கொள்பவர் எத்தனைபேர்? பிறருக்குப்போதித்து அதற்கு மாறாக நடப்பவர் எத்தனைபேர்? கிராப் குடுமிவைத்துக் கண்ணாடி போட்டு நாகரீக மடைந்தோம் நாம் என்போர் எத்தனை? குளிர் நாடுகளில் வசிக்கும் ஆங்கிலேயருக்குக் குடுமி அவ்வளவு அவசியமில்லை. உஷ்ணபூமியாகிய நம் நாட்டில் மிகவும் சிரேஷ்டமான மூளையைக்காப்பாற்றக்கூடிய குடுமியைக்கத்தரித்து மூளையைக் காயவிடுவது மதியீனமே. வாலில்லா நரியின் கதைபோல் நாம் பிறரைப் பார்த்து நடத்தல் மதியீனமே யொழிய வேறில்லை. நம் சௌகர்யத்திற் கேற்றவாறு நடந்துகொள்வதே சிரேஷ்டம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே நாகரீகமுற்ற பெரியோர்களால் பேசப்பெற்றுப் பண்பட்ட ஒரு மொழியின் வளம் குன்றியதற்குக் காரணம் யாது? அம்மொழியில் பலருக்கும் பற்றின்மையேயாகும். சில வருஷங்களுக்குமுன் தோன்றி இன்னும் பண்படாத ஆங்கிலம் செழித்தோங்குவதற்குக் காரணம் யாது? அம்மொழியாளர்க்குரிய பக்தியே. தேசாபிமானிகளுக்கும், பாஷாபிமானிகளுக்கும் தம் நாட்டை விர்த்திக்குக் கொண்டுவர வேண்டுமென விருப்பமிருந்தால் நம் நாட்டை, பாஷைக்குத் தக்கவாறு அநேக பிரிவுகளாக்கி அவ்வெல்லைக்குற்ற தாய்ப்பாஷையைக் கட்டாயபாடமாக்கி ராஜ பாஷையோடு வழங்கும் பாஷையாக ஏற்படுத்தினால் நம்நாடு பாஷாபிமானத்திலும், தேசாபிமானத்திலும் சிறந்துவிடும்.

இப்பூர்வீக பரதகண்டம் கீர்த்தியுடன் விளங்கவேண்டுமாயின் முதற்படியாகத் தாய்ப்பாஷையை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுவதுதான். ஒற்றுமை பாராட்டிச் சென்ற விடமெல்லாம் சங்கங்களை ஏற்படுத்திச் சுய பாஷாபிமானத்தையும், தேசாபிமானத்தையும், சமயாபிமானத்தையும் பரவச்செய்ய முன்வரும் புண்ணியவான்களை எல்லாம் வல்ல ஈசன் கருணையுடன் இரக்ஷிப்பாராக.

K. வரதராஜன்.

## கடவுள் உருவமா அருவமா?

சகோதரர்களே! கடவுள் உருவமா அருவமா? என்றால் உருவம், அருவம், உருவாருவம், அதீதம் என்ற வடிவங்களெல்லாம் ஒரேபடித் தென்பதேயாம். அதனைக் கூறுதும்: கடவுள் உருவம் எனச் சிலரும், அருவம் எனச் சிலரும், உருவாருவம் எனச் சிலருமாகவே உலகில் தெய்வமுண்டென்றெண்ணும் பல மதவாதிகள் கருதுகின்றார்கள். இதில் கடவுளை அருவம் என்பது உயர்ந்த கொள்கை யென்றும், உருவம் என்பது தாழ்ந்த கொள்கை யென்றும் தற்கால நாகரீகர்களெனத் தங்களை யெண்ணிக்கொண் டிருக்கிற சிலரும், சில சாஸ்திரவாதிகளுஞ் சொல்கிறார்கள். இக்கொள்கையானது ஆன்றோர்களால் பண்டைக் காலந் தொடங்கி உயர்ந்த நிலையாக ஆளப்பெற்று வருஞ் சைவசமயக் கொள்கைக்கு எதுவரை பொருத்த மென்பதைக் கொஞ்சம் ஆராய்வோம். நமது சமயத்தின் முழுமுதற் கடவுளின் சொரூபத்தைத் திருவருட்டுணை கொண்டு ஆராயப் புகுவோமேல் உருவம், அருவம், உருவாருவம் என்ற வடிவங்கள், உயிர்கள் எளிதி னறிந்துய்யுமாறு பெருமான் கொண்ட அருள்மேனியே யென்பது வெளியாம். இங்ஙனமின்றி "மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றும், குறையிலா அளவினாலுங் கூறொணா தாகிநின்ற, இறைவனார்" எத்தன்மையினரென ஆராயப் புகுவார்க்கு "இன்னதன்மையனென் றறியாச் சிவன்", "ஆட்பாலவர்க்கருளும் ஆதிமாண்பும் கேட்பான்புகின் அளவில்லை கிளக்கவேண்டா" என்பதே முடிந்த முடிவாம். இம்மட்டோ! 'மைப்படியு' மென்று தொடங்கி, "அவனருளே கண்ணாகக் காணினல்லால்—இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்ற தமிழ்வேத வசனத்தாலும் நன்கு விளங்கும். இன்னதன்மையனென் றறிய முடியாத சிவமே நாமெல்லாம் எளிதினறிந் துய்யும்பொருட்டுக் குருலிங்க சங்கமங்களாகத் திருமேனிகொண்டு வீற்றிருந்து நம்மையுய்வித்துக்கொண்டிருக்கின்றதென் பதே நமது சமயத்துணிவாம். இவற்றில் குரு ஆசிரியரும், லிங்கம் திருக்கோவில்களில் திருமேனி கொண்டிருக்கின்ற வடிவங்களும், சங்கமம் அவ் விறைவனை மனமொழி மெய்களால் இடைவிடாது வழிபடு மெய்யடியார்களென்பதுமாம். இம்மூன்று வடிவங்களையுந் தாரதம்மியமின்றிப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுகின்றவர்களே நம் சைவசமயிகள் என்பது நம் சமயத்தார்க்கு நன்றாய்த்தெரிந்ததே. இங்ஙனமாகக் கடவுள் உருவம் என்று சொன்ன மாத்திரையானே கடவுளை உண்மை இலக்கணத்திற் குறைத்துக் கூறிவிட்டதாகப் பிணங்குகின்றவர்கள் தெரிந்திணங்குமாறு நம் பெருமான் மண் சுமந்த திருமேனியின் மாண்பைக் கொஞ்சம் விசாரித் தவ்வுண்மையைக் காண்போம். பரமாசார்ய மூர்த்திகள் நால்வரில் ஸ்ரீ மணிவாசகப் பெருமான் பொருட்டாய் மதுரை வைகை பெருகிவர அதனாற் சேதமுறு

வண்ணம் அனைபோடு மாறு பணித்த பாண்டியர் பெருமான் கட்டளையை யேற்ற குடிகளில் அன்பே சொரூபமாய் அமைந்த வந்தியார் ஆளாய் வந்த நம்பெருமான் கொண்ட கோலம் மண்சுமப்பவர்களின் வடிவம்போன்றதே யாம். இவ்வடிவில் பாண்டியர் பெருமான் அடித்தஅடி பாண்டியன் முதுகிற் பட்டதென்று தொடங்கி அண்டபிண்ட சராசரங்கட் கெல்லாம் பட்டதாய்ப் புராணம் பகர்கின்றது. இதனால் நாம் உணரவேண்டியது, ஊனக்கண்ணால் காணப்பெறுகின்ற ஓர் வடிவத்தில் பட்ட அடி எவ்வண்டங்களிலு முள்ள எவ்வுயிருக்கும் பட்டதென்பதை ஆராயுங்கால் இறைவன் வடிவமானது நமக்குக் கிடைத்துள்ள மாயா வுருவம் போன்றதல்ல வென்பதும், 'குறித்த தொன்றுகமாட்டாக் குறைவிலான்' என்ற வசனத்தால், கருணையினால் சுதந்தரமாய்க் கொள்ளும் திருமேனியே யென்பதும், 'காயமோ மாயையன்று காண்பது சத்திதன்னால், 'சத்தி தன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்' என்ற வுண்மைநூல் பிரமாணங்களால் ஞானமே திருமேனியாகக்கொண்ட கோலமேயன்றி வேறல்ல வென்பதுமாம். இங்ஙனங் கொள்வதும், உலகுயிர்களுய்யுமா றென்பதும், உய்வான் கொண்ட கோலத்திலும் அவ்விறைவன் சொரூபம் உண்மை இலக்கணங்களில் யாதும் குறைவுபடா தென்பதும், இதனால் அவ்விறைவன் கொள்ளும் உருவம், அருவம், உருவாருவம் என்னுந் திருமேனியும் இன்னதன்மையனென் றறியமுடியாத அதீதத் திருமேனியும் ஒரே படித்தன்றி வித்தியாசம் இல்லை யென்பதும் வெளியாகின்றனவன்றோ?

"அருவமோ ரூபா ரூப மானதோ வன்றிநின்ற—உருவமோ உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னில்—அருவமும் ரூபாரூப மானதும் அன்றிநின்ற—உருவமும் மூன்றுஞ் சொன்ன வொருவனுக் குள்ளதாமே" என்ற பிரமாணத்தாலும் நன்கு விளங்கும்.

> "பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ளமதியின்
> பேதங்களல்ல இவையன்றி நின்ற பிறிதல்ல வென்றுபெருநூல்
> வேதங் கிடந்து தடுமாறும்வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்
> பாதங்க ளோவ வளைஇந்தனுதி பகர்வாரை யாயு மவரே" என்பது

முதலிய செய்யுள்களால் அன்பிற் கெளியரான பெருமான் கருணையே வடிவமாய்த் தோன்றுதலன்றிப் பிறிதில்லை யென்பது நன்கு விளங்கும். அருளால் உயிர்கள் யாவும் இருமை இன்பமும் எய்திச் சுகிக்குமாறு செய்ய வல்ல கருணாநிதியாகிய அவ்விறைவன் பாதாம்புயங்களை மனமொழி மெய்களால் அனவரதமும் வணங்கி யுய்வோமாக.

ம. ச. அருணசலம் பிள்ளை,
ஸ்டாம்பு வெண்டர், கந்தபுரம் தெரு, விருதுபட்டி.

## கைவல்ய நவநீத வசனம்

(222-ம் பக்கத் தொடர்ச்சி.)

### (குரு ஞானபூமிகளின் விசேடணங்களைப் பின்னும் கூறுகிறார்)

சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்ற முதல் மூன்று பூமிகளையு மடைந்தோர் அப்பியாசிகளாகும். அவர்கள் ஜீவன் முத்தர்களல்லர். அசம் சத்தி, பதார்த்தபாவனை, துரியம் என்ற பின்மூன்று பூமிகளில் ஏறினோர், வரன், வரியான், வரிட்டன் என்றஜீவன்முத்தர் பேதங்களாவர். சத்துவாபத்தி யென்னும் நடுப்பூமியிலுள்ளோர் பிரம வித்துக்களாகிய முத்தர்களாவர்.

முதல் மூன்று பூமிகளைமட்டும் அடைந்து நான்காவது பூமியின் அப்பி யாசமின்றியே மரணமடைந்தோர், மேலான சுவர்க்க முதலிய பதவிகளை யடைந்து பிறகு நல்ல வமிசத்தில் பூமியிற்சனித்துக் கிரமமாக நான்காம் பூமி முதலியவற்றை யடைந்து மோக்ஷம் பெறுவார்கள்; அவர்கள் மயக்கத் திற்குக் காரணமான ஜன்மமடையார்கள். சுபேச்சையாகிய முதற் பூமி கை வருவதே பிரயாசை; மற்றவற்றிற்கு வழியாகிய அம்முதற் பூமி கைவந்து விட்டால் முத்தியும் கிடைத்ததாகும்.

இவ்வுலகில் எவரேனும் இஞ்ஞான பூமிகளில் முதற் பூமியிலாவது, இரண்டாம் பூமியிலாவது அப்பியாச முடையோரா யிருந்தால், அப்புருடர் மிலேச்சரா யிருந்தாலும் சரி, முத்தரே யாவர். சற்குரு பாதத்தின்மீ தாணை இது சத்தியமே. இது தவறென்று கூறுவோர் நாசமடைவார்கள். பார பட்சமற்ற சுருதி வாக்கியங்களில் சந்தேகங் கொள்ளாதே. சுருதியுபதே சிக்கும் வாக்கியத்தில் உறுதியுடையவனாய், அகம் பிரம்மம் (சிவோகம்) என்று அநுசந்தானித்து பிரம்மமாகவே யிருந்து சந்தேக மொழிந்திடு வாயாக.

### (சீடன் வருணாச்சிரம விஷயமாக வெழுந்த ஐயத்தைப்பற்றி வினவுதல்.)

சீடன்:—"நெல்லிலிருந்த உமியை வேறுபிரித்து அதை அரிசியாக்கியது போல், அவத்தையாகிய அஞ்ஞானத்தால் மூடப்பட்டிருந்த அடியேனை அஞ்ஞானம் நீங்கிப் பிரம்மசொரூபமாகும்படி அருள்செய்த பரமாசாரி யரே! இந்த ஞானபூமிகளில் ஒன்றிரண்டை யடைந்தோரும், மிலேச்ச ராயினும், முத்தராவார் என்றருளினீர்களே; மனைவியையும் குடும்பத்தையும் விட்டுச் சன்னியாசியானா லொழிய முத்திகிடைக்கா தென்று சிலர் கூறுகிறார்களே, அச்சந்தேகத்தை யகற்றிவைக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

குரு:—புத்திரனே! நீ கேட்ட சங்கை நல்லதே; சந்நியாசம் நால்வகைப்படும்: 1. குடீசகம், 2. பகூதகம், 3. அம்சம், 4. பரம அம்சம், என்பவை யாம். குடும்பத்தை விட்டு நீங்கும் சந்நியாசத்திற்கு மனதில் உண்டா

கும் விராகம் காரணமன்றிக் காஷாய வஸ்திரம் முதலான வேடம் காரணமல்ல.

(விராகம் மூன்று வகையென்க்கூறல்.)

புத்திரனே! நாம் கூறிய விராகம் மந்தம், தீவிரம், தீவிரதாம் என மூன்று வகையாகும்.

1. மந்தவிராகம்.—தாரம், புத்திரர் முதலியவர்கள் நசித்துப்போனதாலோ, குடும்பத்தில் நேர்ந்த சச்சரவு முதலிய வற்ருலோ, குடும்பத்தை வெறுப்பதால் உண்டாகும் விராகம் மந்த வைராக்கியமாம்.

2. தீவிரவிராகம்.—இந்த உடல் உள்ளளவும், நமக்கு மனைவி முதலிய சம்சாரம் வேண்டுவதில்லை யென்று வெறுத்து விடுவது, தீவிர வைராக்கியம்.

3. தீவிரதா விராகம்.—இவ்வுலக போகங்களும் தேவலோகாதி போகங்களும் அநித்தியம், துக்கம், மித்தையாதலின் நமக்கு அவைவேண்டாமென்று வெறுத்து விடுதல் தீவிரதா வைராக்கியமாம்.

இவற்றுள் மந்த வைராக்கியத்தில் எவ்விதச் சந்நியாசமும் சித்திக்க மாட்டாது. ஏனெனில், இதில் இல்லச் சுகத்தை இவன் வெறுக்கவில்லை. குடும்பத்திலுண்டான துயரம் தொல்லை முதலியவற்றைச் சகிக்காது குடும்பத்தைவிடுகிருன்; ஆகையால் குடும்ப இச்சை யிவனைவிட்டொழியவில்லை.

தீவிர வைராக்கியத்தில் குடீசகம், பகூதகம் என்று இரண்டு விதங்களுண்டு. எங்கும் யாத்திரை செய்யத் தேகதிடமில்லாதவர்க்குக் குடீசகமும், யாத்திரைசெய்யச் சக்தியுடையோர்க்குப் பகூதகமும் ஆன்ருேர் விதித்திருக்கின்றனர்.

தீவிரதா வைராக்கியத்தில் ஹம்சன் என்றும், பரமஹம்சன் என்றும் இருவித சந்நியாச அதிகாரமுண்டு. ஹம்சசந்நியாசிக்கு முத்தி பிரம்மலோகத்தில் கிட்டுமேயன்றி இந்த உலகில் கிட்டாது. பரமஹம்ச சந்நியாசிக்குத் தத்துவ ஞானத்தால் இவ்வுலகிலேயே மோக்ஷம் கிடைக்கும். பரமஹம்ச சந்நியாசிகளிலும் சிஞ்ஞாசு, ஞானவான் என்ற இருவிதமுண்டு; இவர்களில் சிஞ்ஞாசு என்பவன் ஞானபூமிகளில் சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்ற முதல் மூன்று பூமிகளின் அப்பியாச முடையோன். ஞானவான் என்போன் மேல் பூமிகளில் சென்று ஜீவன் முத்தியடைந்துள்ள மேலோனும்.

சிஞ்ஞாசுவிலும் இருவிதம் உண்டு: அதாவது, சிலர் மனைவிமக்கள் முதலிய வெல்லாப்புறப் பற்றுக்களையும் துறந்து, அதிதிகளாக விருந்து பிரம்மஞானமடைவர். யாதாயினுமோர் காரணத்தால் புறச்சந்நியாசம் கொள்ள முடியாத சிலர், பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன்

என்ற வருணாசிரம விதிப்படி இல்லறத்தி லிருந்துகொண்டே, அகத்துறவு பூண்டு, குருவையடைந்து அப்பியாசத்தால் ஞானமடைவர்.

இவ்வாறு சாத்திரங்களில் கூறப்பட் டிருப்பதோடு, உலகில் பிரத்தியட்ச அனுபவமாகவும் கண்டிருந்தும், உன்மனதின்கண் ஐயமுண்டாவதென்ன? சுருதியுத்தி யனுபவங்களால் சந்தேகத்தை யொழித்து ஆனந்த நிலையை யடைவாயாக.

[இதனால், மோக்ஷத்தை யடைதற்கு ஆசிரமம் காரணமல்ல; இல்லறத்திலிருப்பினும் சந்நியாசியாயினும், உலகில் எத்தொழில் செய்யினும் மனதில் தீவிர வைராக்கிய மடைந்து, அகத்துறவு பூண்டு, ஞானபூமிகளின் அப்பியாசத்தால் ஞானத்தைப்பெற்றால் எவரும் மோக்ஷமடையலாம் என்று விளங்குவதுணர்க.]

கடலில் அலைநுரையாதிகள் உண்டாகி அதன் கண்ணே நிலைத்திருப்பதுபோல், பிரம்மத்தின் கண்ணே இப்பிரபஞ்சம் தோன்றி நிலைத்திருக்கிறது. இப்பிரபஞ்சம் மனத்தால் பாவனைசெய்தே யுண்டானதாகும். ஆராய்ந்து பார்க்கின், இப்பிரபஞ்ச மனைத்தும் நிலைத்து நிற்பது அறிவின் கண்ணேயாகும். அறிவே பிரம சொரூபம். எங்கும் நிறைந்து நிற்கும் அறிவு சொரூபமாக விருந்து, ஆனந்தத்தை யனுபவிப்பாயாக.

சீடன்:—எந்தையே! எவ்வாறு நிலையிலிருந்தால் அத்தகைய ஆனந்த அனுபவம் அடியேற்குப் புலப்படும் என்பதை விளக்கியருளப் பிரார்த்திக்கிறேன்.

ஆசான்:—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியாகிய இம்மூன்று அவஸ்தைகளிலுமுண்டாகும் விர்த்தியை யொழித்து, அறிவுசொருபமாக விருப்பாயாயின் ஆனந்தம் பெறலாம்.

சீடன்:—சமஸ்கார வசத்தால் அந்தக்கரணத்தினின் றெழும் விருத்திகளையெல்லாம் அடக்குவதற்கு அடியேற் கோருபாயம் அருளல்வேண்டும்.

ஆசான்:—ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை யடக்கி நீ அவற்றிற்காசனாகி அவையுனக்கு அடங்கி ஆட்களாக இருக்கப் பெற்றால் சகல வாசனைகளும் தானேயடங்கும்.

அதுவுமன்றி (அகந்தை, மமதை, காமக்குரோதாதிகள் முதலிய) விருத்திகளை யடக்க வேறு உபாயங்களுமுண்டு.

அவற்றில் இரேசக பூரக கும்பகங்களால், துருத்திபோல் வீசிக்கொண்டிருக்கும் பிராண வாயுவை யடக்கினால் மனோவிர்த்திகள் அடங்கும். இது ஒருவித யோகமார்க்கமாகும். இப்படிச் செய்யப் பிரியமில்லையேல், காரண சரீரமாகிய அவித்தையை நாசஞ்செய்யின் மனோவிர்த்திகள் யாவும் தானே யடங்கும்.

இக்காரண சரீரத்தை யெவ்வாறு நீக்குவதென்னில், வேதம் பொய் கூறுதாகையால் அதன் வாக்கியங்களை மனதில் தரிக்கச்செயது, "பரிபூரண சொரூபமாகிய என்னிடத்தில் இப்பிரபஞ்சங்கள் யாவும் ஆரோபமாகத் தோற்றிக்கொண்டிருக்கின்றன" என்ற நிச்சயம் வந்துவிட்டால், அவித்தை எங்குமில்லாது ஒழிந்துபோம்.

[விர்த்திகளடங்கல் என்பது அலையுமனம் அகத்தடங்குதலேயாகும். அதாவது, மனநாசமே வேண்டுவது - மனம், வாயு, அம்சமானதால் அதற்கு அலையும் சுபாவமே அதிகமாக வுள்ளது. வாயுவடங்கின் மனமடங்கும் என்பது ஒரு கொள்கை. ஆனால் அது யாவர்க்கும் ஒவ்வாது. வாயுவடங்கியிருக்கிற மட்டுமே மனம் அடங்கியிருக்கும். அது ஒரு குதிரையை யோடாதபடிக் கடிவாளவாரை யிழுத்துப் பிடித்துக்கொண் டிருப்பதுபோலாகும். நாம் மறுபடி வாரைத் தளர்த்திவிட்டதே குதிரை ஓட ஆரம்பிக்கும். அது போல் மறுபடி சுவாசம் இயங்கத் தொடங்கியதே மனம் பழையபடி அலையத் தொடங்கும். வாயுவைப்பற்றிக் கவனிக்காமலே மனதை யடக்கலாகும். மனம் சூக்கும பஞ்சபூதங்களின் சத்துவகுணத்தி லுற்பத்தியானது. பிராண வாயு இராஜோகுணத்தி லுண்டாயது. அவித்தையை யழித்து ஞானம் பெறுவதற்கு மனோலயமே அவசியம் வேண்டுவதன்றி, வாயுவடக்கம் அல்ல. மனோலயத்திற்குப் பின்பே அவித்தையுள்ளது. அவித்தையே அஞ்ஞான மென்பதும். அவித்தை நீங்கியதே ஆன்மதரிசன முண்டாகும்; அதாவது, ஞானோதயமாகும்; ஆனால், மனம் சதா அலைந்துகொண்டே யிருப்பதால் அதை யுபாயத்தால் அடக்கவேண்டும்; ஈசுவர அருளின்றி அவித்தையை யழிக்கமுடியாது. பக்தியால் மனமும் சீக்கிரம் ஒரு நிலையில் நிற்கும்; ஈசுர அருளும் கிட்டி, அவித்தையை எளிதிலழிக்க அனுகூலமுண்டாகும். ஆகையால் பக்தியோடு கூடிய அப்பியாசமே ஞானமடைய இன்றியமையாத சாதனமாகும்.]

(சீடன் மனம் அலைவதால் எவ்வாறு மேற்கூறியபடி தாரணை செய்தல் என வினவுதல்.)

**சீடன்:**—தேசிகமூர்த்தியே! 'பரிபூரணமான என்மேல் ஆகாசாதிப் பிரபஞ்சம் யாவும் தோற்றாவு மாத்திரமே' என்ற நிச்சயத்தோடு நிற்க வேண்டுமென வருளினீர்கள். உலக விவகாரங்களால் மனம் சதா அலைந்துகொண்டே யிருக்கும்போது தாங்க ளருளியபடி எவ்வாறு நிற்கமுடியும்?

**ஆசான்:**—"என்னையன்றி யன்னியமாய் ஈண்டொன்றுமே யில்லை. இங்கு நாமரூபமாகத் தோற்றிக்கொண் டிருக்கும் பிரபஞ்ச மனைத்தும் உண்மையில் என் மயமே. அலைதிவலையாதிகள் நீரையன்றி வேறுயில்லை; ஆபரணாதிகளனைத்தும் பொன்னையன்றி வேறாக இல்லை. அதுபோல்

இவை யனைத்தும் என்னையன்றி யில்லை, நானே. இத்தோற்றமனைத்தும் ககனாரவிந்தம் போலும், கானல் நீர்போலும், கனுப்போலும் கற்பிதமே யாகும்" என்று நிச்சயித்து, நான் சித்சொரூபமே என்று திடத்தோடிருந்தால் அவித்தை யழிந்துபோம்.

"தோன்றிடும் பொருள்க ளுண்டாய்த் தோன்றியே யின்ப மாகித்
தோன்றிடு மதனு லந்தச் சொரூபமே யென்று கண்டு
தோன்றிடுஞ் சொரூபந் தன்னிற் றோன்றுமீ தசத்தே யென்று
தோன்றிடுஞ் சொரூபந் தானய்த் துளக்கமற் றிருந்தான் வேந்தன்"

(குமாரதேவர்.

"உலகமே பரப்பிரம முரைக்கு மந்தப் பிரமநா
அலகில்கலை யுணர்ந்தாலு மருத்த மிதே யறிகண்டாய்
* * * * *"

வள்ளலார்.

(தொடரும்)

சீடன்.

---

# இரணியன் (வாதி) மன்ருட்டம்

(216-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேன்மை தங்கிய நீதிபதியவர்களே! இரண்டாம் பிரதி வாதியவர்கள் சட்டப்படி அக்கிரமம் செய்வோர்களை அழிக்க அதிகாரமுண்டு என்று சொல்லுவது விந்தையா யிருக்கிறது. 2-ம் பிரதிவாதி கூறுவது முழுமையும்பொய். உலகத்தைப் படைக்கவும், இரக்ஷிக்கவும், அழிக்கவும் இவர் தமக்கு அதிகாரமுண் டென்பது, இவர் சமயத்திற்குத் தக்கபடி கூறும் கூற்றேயன்றி யுண்மையல்ல. உண்மையில் இவர்கள் மூவர்சேர்ந்த ஒரு கள்ளக்கூட்டம். இவர்களால் எல்லாச் சீவர்களுக்கும் அம்மம்ம! உண்டாகும் துன்பத்திற்களவே யில்லை. அவற்றை விவரித்துக் கூறவேண்டியது நான் நீதிபெற அவசியமான தாகையால், கோர்ட்டார் அதைப் பூராவும் கேட்கப் பிரார்த்திக்கிறேன்.

2 ம் பிரதிவாதிக்குப் பிரம்மன் என்ற ஒருபுதல்வர் உண்டு; அவர்தான் சிருட்டிக்கும் தொழில் செய்பவர். 2-ம் பிரதிவாதியின் மைத்துனர் உருத்திரன், அல்லது சிவன் என்பவர் அழிக்கும் தொழில் செய்பவர். 2-ம் பிரதிவாதி இரக்ஷிக்கும் தொழில் செய்பவர்; ஆனல் இவர்களுக்குள் ஒரு வரம்பு கிடையாது. இரக்ஷிக்கும் தொழிலுடைய இவ்விரண்டாம் பிரதிவாதி சங்காரத்தொழிலைச் செய்தது பெரிய அக்கிரமம். இவர் மைத்துனரோ யாவற்றையும் அழிக்க எமன் என்ற ஒரு உத்தியோகஸ்தனை யேற்படுத்திக் கடைசியில் அவனையே யழிக்கும் புண்ணிய புருடர். இவர்கள் சமயத்திற்குத் தக்கபடி ஒருவருக் கொருவர் மிகத் தந்திரமாக உதவிசெய்து கொள்வார்கள். கேள்வி வந்தால் நானும், என்மைத்துனரும் ஒன்றுதான்; நாங்கள்

மூவரும் ஒன்றே என்று நிரூபிப்பார்கள். இவர்கள் ஒன்றுசேர்ந்து சீவர்களுக்குச் செய்யுந் தீங்கென்னவெனில், நிம்மதியாய்ச் சுகமாக விருந்த சீவர்களுக்குத் தேகம், அந்தக்காணம் முதலியவற்றை யளித்து அவர்களைப் பலவித சிருட்டிகள் நிறைந்த இவ்வுலகிற் பிறப்பித்து, இரக்ஷித்து, மறுபடியழித்து, இப்படியே மாறிமாறி நால்வகையோனி எழுவகைத் தோற்றமாகிய பிறவிகளில் சதாபிறந்து படாதபாடும் படும்படிச் செய்கிறார்கள்.

அந்தோ! என் இப்படி எங்களை யலக்கழிக்கிறீர்களென்று கேட்டால், "எங்களால் ஒரு குற்றமுமில்லை; நீங்கள் செய்த கர்மத்தின்படி உங்களுக்குச் சென்மமளிக்கப் படுகிறது; அதன்படி நன்மைதீமைகளும், சுகதுக்கங்களும் உண்டாகின்றன" வென்று கூறிவிடுகிறார்கள். இங்கு கோர்ட்டாரவர்கள் தயைபுரிந்து கவனிக்கக் கோருகிறேன்.

சீவர்கள் மனம், வாக்கு, காயம் என்ற திரிகாணங்களாலேயே கருமங்களைச் செய்கிறார்கள். அந்தோ! சும்மாவிருந்த சீவர்களுக்கு அந்தத்திரிகாணங்களையும் வலியக் கொடுத்தவர்கள் இவர்களே. இவைமட்டுமல்ல; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், டம்பம், ஆசுயை முதலிய கொடிய குணங்களையும் சீவர்களுக்குக் கொடுத்து அவர்களைப் பாபகருமங்கள் செய்யத் தூண்டுகிறவர்கள் இவர்களே.

இவர்களில் இரண்டாம் பிரதிவாதி மிக்க சுயகாரிய துரந்தரர்; இவர் தமக்கு அவசியமானபோது பூலோகத்தில் ஒருசாதாரண மனிதனைப்போல் அவதரிப்பதுண்டு; அப்போது இவர்செய்யும் அக்கிரமங்களுக்கு அளவில்லை. திருட்டாந்தமாக, இவர் கிருஷ்ணனாக அவதரித்தபோது செய்த காரியங்களில் சிலவற்றைக் கூறுகிறேன்:—

(1) துரியோதனனுதியருக்கும் பாண்டவர் களுக்கும் சச்சரவுநேர்ந்து யுத்தம்செய்யத் தீர்மானித்த போது, துரியோதனன், அர்ச்சுனன் புத்திரனாகிய அரவான் என்பவனைக் காளிக்குக் களப்பலியாக வரும்படி கேட்க, அரவான் விரோதிக்கு உதவிசெய்கிறேமே என்பதை யெண்ணுமல் பெருந்தன்மையோடு "முன்னடிப் பலி செலுத்துகிறவர்களுக்கு உதவுகிறேன்" எனமுன். துரியோதனன் அமாவாசை தினத்தன்று பலிசெலுத்த ஏற்பாடு செய்தான். அவன் அரவானைப் பலி செலுத்தினால் ஜெயமடைவானென்று எண்ணிய, 2-ம் பிரதிவாதி, துரியோதனன் குறித்த நாளுக்கு முன்னுளே அமாவாசையென்று புரட்டிக்கூறி அன்று அரவான் பாண்டவர் பட்சத்தில் பலியாகும்படி செய்து விட்டார்.

(2) பிறகு யுத்தம் ஆரம்பித்ததினம், இரு கட்சியாருடைய சேனைகளும் குருக்ஷேத்திரத்தில் அணிவகுத்து நின்றபோது, 2-வது பிரதிவாதி அர்ச்சுனனுக்கு இரதசாரதியாக விருந்தார். அர்ச்சுனன் தன் முன் தங்கள் உயிர்களைத் தத்தம்செய்ய ஆயத்தமாக நிற்கும், துரியோதனுதியாகிய தன் சகோதரர்களையும், மற்றும் தகப்பன்மார், பாட்டன்மார், ஆசாரியர்கள்

முதலியவர்களையும் கண்டு மிக்க இரக்கங் கொண்டவனாய், 2-ம் பிரதி வாதியை நோக்கி "அந்தோ! இத்தகைய சுற்றத்தாரை யெல்லாம் கொன்று அநித்தியமான உலகபோகத்திற் காசைவைத்து இப்பூமியை யெவ்வளவு காலம் நாம் ஆளப்போவது. இது தகுதியாக எனக்குத்தோன்ற வில்லை. நான் கானகம் சென்று தவம்புரிந்து நித்தியமான பதவியை யடைவேன்" என்றான்.

2-ம் பிரதிவாதி அர்ச்சுனனை நோக்கி "எல்லாம் நானே செய்கிறவன்; நீ செய்கிறாயென்ற எண்ணத்தை விட்டுவிட்டு, உன் க்ஷத்திரிய தருமத்திற் கேற்றபடி முன்வைத்த காலைப் பின்வைக்காது எதிரிகளைச் சங்கரித்து ஜெயம்பெறு; இன்றி யுத்தத்தில் மடிந்தால் வீரசொர்க்கம் அடைவாய்" என்று தந்திரவார்த்தைகள் கூறி அவனை மயக்கி எண்ணிறந்த பேரைக் கொல்லும்படி செய்தார்.

(3) யுத்தம் நடந்துகொண் டிருக்கையில் சைந்தவன், அர்ச்சுனன் புத்திரனாகிய அபிமன்னியுவென்ற வாலிபனோடுபோர் புரியும்போது, அபிமன்னியு தனியாய் அனேகம் சூரரோடு யுத்தம்செய்ய முடியாமல் தன் ஆபத்தைத் தன் தந்தை முதலியவர்களுக் கறிவிக்கச் சங்கத்தொனி செய்தகாலையில், 2-ம் பிரதிவாதி அத்தொனி அர்ச்சுனன் வீமன் முதலியவர்கள் செவியில் வீழாவண்ணம் தன் சங்கத்தைக் கெட்டியாகத்தொனிக்க, அபிமன்னியு உதவிகிடைக்காமல் போரில் மரித்தான். 2-ம் பிரதிவாதி தன் சுயகாரியம் சித்திக்க வெண்ணித் தன் பக்தனும் தோழனும் சுற்றத்தானுமாகிய அர்ச்சுனன் புத்திரன் என்றுங் கருதாமல் அவ்வாலிபனைக் கொல்வித்தார்.

(4) "என் புத்திரனைக்கொன்ற சயிந்தவனை மறுநாள் சூரியன் அத்தமனமாகுமுன் நான் கொல்லாவிட்டால் அக்கினிப்பிரவேசமாவேன்" என்று அர்ச்சுனன் சபதம்செய்து கொண்டான். மறுநாள் யுத்தத்தில் சூரியாத்தமனத்திற்குள் சயிந்தவனைக் கொல்ல முடியாதென்பதை யுணர்ந்த 2-ம் பிரதிவாதி, சில நாழிகைகள் பொழுதிருக்கும் போதே தன் சக்கரத்தால் சூரியனை மறைத்துப் பொழு தமர்ந்ததாகக்காட்ட, அர்ச்சுனன் அக்கினிப் பிரவேசத்திற்கு ஆயத்தமாகி அக்கினிக் குழியைச்சுற்றி வரும்போது, இரண்டாம் பிரதிவாதி திடீலென்று சக்கரத்தை யெடுத்து விட்டு, சூரியன் தெரியும்படிசெய்து "ஓ பொழுதிருக்கிறது! அர்ச்சுனா அதோ! சயிந்தவன் கொல்" என்றுகூறி மற்றபேரைப்போல், அர்ச்சுனனது அக்கினிப்பிரவேசத்தைக்காண அங்குவந்திருந்த சயிந்தவனைக் கொல்லச்செய்தார். இச் சூட்சி தவறுவதாயின், பாரதயுத்தத்தில் ஆயுதத்தைக் கரத்தி லெடுப்பதில்லை யென்று சத்தியவாக்களித்த இவர், அப்போதே தன் சக்கரத்தால் துரியோதனாதியரைக்கொன்று அன்றே தருமருக்குப்பட்டங்கட்டக் கருதித் தமது இரதம், ஆயுதங்கள்யாவும் ஆயத்தமாக வைத்திருக்கும்படி தமது தேர்ப்பாகனாகிய மாதலிக்குக் கட்டளையிட்டிருந்தார்.

(5) துரோணரைக் கொல்ல "அசுவத்தாமா அதோகுஞ்சரம்" என்று தருமரைக்கூறச் செய்து, குஞ்சர என்ற சத்தம் துரோணர் செவியில்விழா தபடி இவர் சங்கூத, துரோணர் தன் மைந்தனிறந்தா னென்று கருதி ஆவியை விட்டார்.

(6) கர்ணனைக்கொல்ல இந்திரனைக் கொண்டும், ஒரு பிராம்மணன் போலத் தாம் வேடம்பூண்டு சென்றும் கர்ணனுக்கு உயிர்க்காப்பாக விருந்த அவன் குண்டலங்களையும், அவன்செய்ததரும பலனையும் அவனிடமிருந்து வாங்கிக்கொண்டார். இவ்வாறு இவர்செய்யும் அக்கிரமங்களுக் களவே யில்லை. (இன்னும் தொடரும்)

---

## ஜீ வ க தி.

ஜீவகதி யென்பது ஜீவன் சரீரத்தை விட்டபின் எவ்வாறு செல்கின்றது, எவ்விடத்தை யடைகின்றது, என்ன செய்கின்றது, மீண்டும் எவ்வாறு வருகின்றது என்பனவற்றைக் கூறுகின்றதாம். இவ்விஷயம் புராணங்களில் இறைந்துகிடக்கின்றது. கருட புராணத்திற் சற்று விளக்கமாய்க் கூறப்பட்டுள்ளது. பிரமசூத்திர பாஷியக்காரர்கள் தமது பாஷியத்தில் விளக்கமாய்க் கூறியிருக்கிறார்கள். பாரதம் முதலியவற்றிலுங் காணலாம். ஆகவே ஜீவகதி யென்பது சரீரத்தைவிட்ட ஜீவனுடைய நிலைமையென்று கொள்க.

இதனை விரிப்பதற்கு முன்னால் முன்னே கூறிய சில விஷயங்களை ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவை ஜீவனுடைய ஸ்தூல சூட்சும சரீரங்கள், ஸ்தூல சரீரத்தின் அந்தக்கரண புறக்காரணங்களாற் செய்யப்படும் பாவ புண்ணிய கன்மங்கள், அக்கன்மங்கள் வாசனாரூபமாகச் சூட்சும சரீரத்தைப் பற்றி நிற்குமென்பது, இந்த வாசனை காரணமாகவே ஜீவன் ஜனன மரணங்களை யடைந்து சொர்க்க நரகாதி போகங்களையும் நுகருமென்பது, அவ்வப் போகங்களை நுகர்ந்தொழிந்த வனந்தரம் அவ்வவ்வுலகங்களை விட்டொழிந்து வேறுலகத்தில் வேறு சரீரத்தைப் பெறுமென்பது, பாவவாசனைகனதியும் இருணிறமும் கொண்டு மனமாதியந்தக் கரணங்களை மலினப்படுத்திச் சூட்சும சரீரத்தையும்பற்றி ஆன்ம அறிவை மறைத்துக்கொண்டு நிற்குமென்பது, புண்ணிய கன்ம வாசனை வெகு லேசாய் ஒளிமயமாய் ஆன்ம வறிவைப் பிரகாசிப்பித்து நிற்குமென்பது, பாவகன்மத்தாற் கெட்ட சிந்தனை, செய்கை முதலியனவும், புண்ணிய கன்மத்தால் நற்சிந்தை, நற்செய்கை முதலியனவும் ஆன்மாவுக்குண்டாகு மென்பது முதலியனவாம். புண்ணியான்மாக்கள் ஒளிமார்க்கத்தில் நடந்து ஒளிமயமான புண்ணிய வுலகங்களையும், பாவான்மாக்கள் இருள் மார்க்கமாய் இருளடைந்தனவும், துன்ப நிறைந்தனவுமான வுலகங்களையும் அடையுமென்பதையும் நினைக்கவேண்டும்.

உலகங்களாவன: நட்சத்திர வடிவமாக வானத்தில் காணப்படும் அண்டங்களேயாம். அவற்றைக் கணக்கிட்டறிய எந்தப் புத்திமானாலு மியலாது.

யோகவலிமையால் மலத்தைத் தகித்து எங்குந் தானாய் நிற்கும் யோகிகளே யுணரத்தக்கவர்கள். ஆயினும், இவ்வளவினவென்று பிறருக்குத் தெரிவிக்க முடியாது. இவ்வண்டங்க ளெல்லாம் பஞ்சபூதங்களா லுண்டாக்கப்பட்டனவே. பிருதிவியண்டம், அப்பு அண்டம், தேயு அண்டம், வாயுவண்டம், ஆகாயவண்டம் என நிற்கும். பூமி, சந்திரன், சொர்க்க முதலியன பிருதிவியண்டத்திற் சேர்ந்தனவேயாம். சூரியன், கிருத்திகை, செவ்வாய் பிரகஸ்பதி, திருவாதிரை முதலியன அக்கினியண்டமாம். சந்திரன், பூமியும், நீரு நிறைந்த வண்டமாம். இவற்றிற்கு மேலாக மற்றைய வண்டங்களுள்ளன. இவற்றுள் நாம் கவனிக்கவேண்டிய அவசியமுள்ளவை சூரிய சந்திர வண்டங்களேயாம். நமக்கு ஒரு சூரியன் காணப்பட்டாலும் பல்லாயிரங் கோடி சூரியர்களுண்டென்பது சாத்திரக் கருத்து. அச்சூரியர்களாலேயே வான விரிவில் காணப்படும் அண்டங்க ளெல்லாம் நமக்கு ஒளி வடிவமாகக் காணப்படுகின்றன. சந்திரன்களு மவ்வாறே யளவுகடந்தனவாம். இவ்வண்டங்களெல்லாம் ஜீவான்மாக்களுக் கிடமாய்ப் போக போக்கியங்களைக் கொடுத்துக்கொண் டிருக்கின்றன. ஒன்றும் வெறுமையாய்ப் பயனற்றிருப்பதல்ல வென்பது நூல்களின் கருத்து. இவ்வுலகின் கண்ணுள்ள ஜீவான்மாக்களுக்கும் நமது சரீரம் போலவே யிருக்கவேண்டு மென்கிற நியதியில்லை. அவ்வவ் வுலகங்களுக் கேற்றவாறே மாறுபட்டிருக்கலாம். தேவர் தானவர், பைசாசர், கருடர், காந்தர்வர் முதலாயினோருக்கு நமது சரீரத்துக்கு மாறுபட்ட சரீரமுள்ளதாகப் புராணாதிகளாற் காண்கின்றோமல்லவா? ஆயினு மின்ப துன்பங்கள் ஒரே விதமாகத்தா னிருக்கவேண்டும். ஜீவான்மா பிராரப்த கன்மமுடிவில் தன் சரீரத்தை விட்டபின் இவ்வுலகங்களி லேதேனு மொன்றை யடையும். தானுள்ள உலகத்துக்குச் சம்பந்தப்பட்டுள்ள சூரிய சத்திக்கு உட்பட்ட வுலகத்தையே யடையும். அதாவது, நமது பூலோகத்திலுள்ள ஜீவான்மா நமக்குக் காணப்படுகிற சூரியனுடைய சக்தியிற் சுழன்றுகொண் டிருக்கிற அண்டங்களையே சென்றடையும். மஹா புண்ணியங்களைச் செய்தவர்கள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரக்கர்த்தர்களான பிரம, விஷ்ணு, ருத்திரர்களுடைய உலகங்களையு மடைவார்கள். இதற்கு மேல் மோட்ச வுலகமேயாம். அதனைச் சமையம் வந்தபோது சிறிது கூறுவோம்.

இந்த ஆன்மா சரீரத்தில் மூளை, லலாடம், இருதயம், நாபி இவற்றையே இடமாகக்கொண்டு வசிக்கின்றது. மூளையே பிரதானம்; அதனாலேதான் அதனை அறிவுக்கிருப்பிடமென்று வேதாதிகலைகள் கூறுகின்றன. இவ்வான்மா லலாட ஸ்தானத்தைப்பற்றி நிற்பதே ஜாக்கிரமென்றும், கண்டத்தை யடைவதே சொற்பனமென்றும், இருதயத்திற் சேருவதே சுழுத்தியென்றும், அதற்குக் கீழுள்ள நாபியிலடைவதே துரியமென்றும், மூலாதாரத்தி லடங்கிநிற்பதே துரியாதீதமென்றும் நூல்கள்கூறுகின்றன. சொற்

பஞவஸ்தையில் மனமொன்றையே பிரதானமாய்ப்பற்றி நிற்பதிஞல் அம் மனத்திஞுள் ளடங்கிக்கிடக்கும் பூர்வஜன்ம வாசனைகளும், இச்சனனத்தில் ஜாக்கிராவஸ்தையிற் கண்டவை கேட்டவைகளும் அம்மனதிற்குத் தோற் றும்; அதுவே சொற்பனமாம். சுழுத்தி அவஸ்தையில் ஆன்மாவுக்கு மனச் சம்பந்தமின்மையால் ஒன்றையும் உணராமல் ஓய்ந்திருக்கும்; அதையே நல்ல நித்திரை யென்று கூறுவார்கள். இங்ஙனம் அறிவே சொரூபமாகிய ஆன்மா சரீரத்தி லிருந்துகொண்டு, மனதையும் புலன்களையும் துணையாகக் கொண்டு அகவிஷயங்களையும், புறவிஷயங்களையும் அறிந்து, சரீரத்தையும் நடத்தும்.

இவ்விஷயத்திற் சிலர் சில ஆக்ஷேபனைகளை யெழுப்புவர். அவையா வன—“ஆன்மா அணுவா யிருந்தால் இவ்வளவு பெரிய சரீரத்தை யெப்படி நடத்தும் சக்தியைப் பெறும்? ஆன்மா ரூபமுள்ளதாயிற் கட்புலனுக்குப் புலப்படவேண்டும்; புலப்படாமையால் அருவமேயாம். அருவப் பொருள் பெரிய உடலை நடத்துவதென்றால் ஒவ்வத் தகாததே” என்பன. இவற்றை யிவ்வாறு கூறிமறுக்க:—சிறிய பொருள் பொருளை நடத்தக்கூடாதென்று நியதியில்லை. ஆன்மா அணுவாயினும் அறிவே யுருவமாக வுடையதாதலால் அவ்வறிவின் வலிகொண்டே நடத்த யாதுந் தடையில்லை. ஒரு மாலுமி யானவன் மிகச் சிறிய சொரூபத்தை யுடையவஞ யிருந்தும் தன்னிலும் எத்தனையோ மடங்கு பெரிதாயுள்ள கப்பலைத் தன்னிஷ்டம்போலத் திருப் புதல் முதலியவற்ருல் நடத்துவதைப் பிரத்தியட்சமா யறியலாம். சிறிய ஆகிருதியுள்ள ஒரு மனிதன் பெரிய கப்பலை யெப்படி நடத்தக்கூடு மென் பது புத்திசாலித்தனமான கேள்வியாகாது. மின்சாரம் நீராவி இவைகள் அரூபப் பொருளா யிருந்தும் எவ்வளவோ பெரிய வேலைகளைச் செய்வதும் பிரத்தியட்சமாதலால் அவைபோலவே யரூபமான ஆன்மாவும் சரீரத்தை நடத்தத் தடையிராதென்க. அறிவிஞலாகாத காரியம் ஒன்றுமில்லையென்க.

ஜீவன் கன்மவசத்திஞல், வியாதியிஞலோ வேறு எந்தக் காரணத் திஞலோ கெட்டுப்போன சரீரத்தைவிட்டு வேறு புதிய சரீரத்தையடைய வெளிப்படும். ஜீவன் உச்சியின் வழியாக உட்சென்றதாதலால் அவ்வழியாக வெளிப்படுவதே யுசிதம். போனவழியே திரும்புதலே யுசிதமல்லவா? அவ் வழியாக வெளிப்படுவதே சரியான மரணமென்றும், அவ்வான்மா மோட் சத்தையேனும் பிரம, விஷ்ணு, ருத்திரேந்திராதி, தேவர்கள் பதவியை யேனும் ஒன்றடையும். இது புண்ணியாத்மாக்களுக்கே யுரியது. தபசிஞல் மலத்தைத் தகித்துத் துவாதசாந்த ஸ்தலத்தைச் சுத்தப்படுத்தி யிருக்கும் ஆன்மா கபாலத்தைக்கீண்டு செல்லும். அவ்வாறு சுத்தப்படுத்தாத சரீரத்தி லுள்ள ஆன்மா கண், காது, வாய் முதலிய வழிகளால் வெளிப்படும். இது பாமான்மாக்களுக் குரியதாதலால் அவ்வான்மாக்கள் நெடுங்காலம் சுழன்று திரிந்து கடைசியில் தம் சரீர வாசனைக்கேற்ற குணமுள்ள அண்டத்தை

யடையும். இவ்வாறு வெளிப்பட்ட ஆன்மா செல்லு மார்க்க மெதுவென் னிற் கூறுதும்.

ஊர்த்துவகதி, தூமகதி, அதோ கதியென மூவகை மார்க்கங்கள் ஆகாயத்திலுண்டு. தேவயானமென்று ஒரு மார்க்கமுண்டென்றும், அது தேவர்கள் சஞ்சரிக்கும் மார்க்கமென்றும் கூறுவர். ஊர்த்துவகதி அர்ச்சிராமார்க்கம் என்றும், சூரியமார்க்கமென்றும் கூறப்படும். அதோகதி சந்திரமார்க்கமென்றும் பெயர்பெறும். தூமகதி யென்பது புகைமார்க்கம். அது யாக எக்ஞங்களைச்செய்து தமது சூட்சும சரீரத்தைப் புகை மயமாக்கிக் கொண்டிருக்கும் கர்மானுஷ்டாதாக்கள் செல்லும் மார்க்கமாம். இது துவிஜர்களுக்கே யுரியதாதலால் ஏனையர்க்கு அவ்வளவு சிறந்ததன்று. தேவயான மென்பது அர்ஜுனன், தசரதன் முதலிய அரசர்களும், ரிஷிகளும் தேவலோகஞ் சென்ற மார்க்கமாகும்; இம்மார்க்கமும் புண்ணியாத்மாக்கள் செல்லுதற் குரியதேயாம். ஊர்த்துவ மார்க்கமென்பது சூரியகிரண மார்க்கமாம். அதோகதியென்பது சந்திர கிரகணத்தைப்பற்றி நிற்கும் மார்க்கமாம். சூரிய கிரணம் தன் சக்தியிற் சிக்கிய பொருள்களை மேலே யிழுக்கும் சக்தியையுடையது. அது நீரை ஆவியாகச் செய்து மேலெ யிழுப்பதினாற் காணலாம். அதனாலது ஊர்த்துவகதி (மேல்நோக்கும் கதி) என்று கூறப்படும்.

(வரும்.)

சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்

(230-ம் பக்கத் தொடர்ச்சி.)

16. மூத்தோர்சொல் வார்த்தை யமுர்தம்.—நண்பர்களே! இவ்வுபதேச மொழியை நாம் சிறுவயதிலேயே வாசித்திருக்கிறோம்; பெரும்பாலார் வாசித்தே யிருப்பார்கள். ஆனால் ஆன்றோர் கூறிய மொழிகளின் கருத்தையும் அதனாலடையத்தக்க பயனையுமறிந்து அப்புத்திமதியைக் கடைப்பிடித் தொழுகுவோர் மிகச் சிலரே யென்று கருதலாம்.

மூத்தோர் என்று இங்கு கூறப்பட்டது யாரை? வயதில் அதிகமுடையோர்களையா வெனில், அதுமட்டு மல்ல; வயதில் முதிர்ந்தோரா யிருப்பதோடு அறிவு, கல்வி, கேள்விகளிலும் முதிர்ந்தோர்களா யிருப்போரையே அவ்வார்த்தை குறிக்கிறது. கல்விமட்டு மிருப்பது போதாது. உலக அநுபவமும் வேண்டும். வயதில் முதிர்ந்தோரிடம் உலக அநுபவம் இருக்கும்.

ஆனால் இக்காலத்தில் விசேஷமாகச் செல்வமும் செல்வாக்கு முடையோரையே உலகத்தோர் மதித்து மரியாதை செய்து, நியாயமாயினும் அநியாயமாயினும் மனமொப்பினும் ஒப்பாவிடினும், அவர்கள் கட்டளைப்

படிநடக்கச் சித்தமாக விருக்கின்றனர்: உண்மையான பெரியோர் வார்த்தைகளோ அலட்சியம் செய்யப்படுகின்றன. சாதாரணமாய் வயதில் முதிர்ந்தோர் வார்த்தைகளைக் கேட்டால் "ஏ! கிழவன் பேச்சு" என்று அலட்சியமாகக் கூறிவிடுகிறார்கள்.

ஆனால் நேயர்களே! கொஞ்சம் அறிவுடையோர் அவ்வாறு செய்ய மாட்டார்கள். முதியோர் எதையும் அநுபவத்தால் அறிந்து கூறுகிறார்கள். வாலிபகாலத்தில் அவர்கள் பல தவறுகளைச் செய்து அவற்றால் நேர்ந்த இடையூறுகளை யுணர்ந்திருக்கும் அநுபவத்தால் அத்தகைய நெறிகளில் செல்ல வேண்டாமென்று நமக்குக் கூறுகிறார்கள். அவர்கள் சுய நலம் ஒன்றையும் எதிர்பாராமல் நமது நன்மையைக் கோரியே நமக்குப்புத்தி கூறுகிறார்கள். ஆதலின் அத்தகைய மூத்தோர் வார்த்தைகளை அமுதவாக்கியமாக மதித்து நாம் அதன்படி நடந்தொழுக வேண்டும்.

இக்காலத்தில் ஆங்கிலங் கற்றவர்களிற் சிலர் வெறுந்தமிழ் முதலிய தாய்ப்பாஷையை மட்டும் கற்றவர்கள் எவ்வளவு கல்வியாளரா யிருப்பினும் அவர்களை யலட்சியமாகவே மதிக்கிறார்கள். ஆங்கிலங் கற்பதுதான் கல்வி; மற்றபாஷை நூல்களைக் கற்பது கல்வியல்ல என்று இவர்கள் கருதுகிறார்கள். இவர்கள் கற்கும் அப்பாஷை நூல்களின் தன்மையும், இப்போதிருக்கும் கல்வி முறையுமே யிவர்களுக்கு இந்த மதியீனத்தை யுண்டாக்குகின்றன. அவை இவர்கள் புத்தியைக் கூர்மையாக்குகின்றனவே யன்றி அறிவைப் பிரகாசிக்கச் செய்கிறதில்லை. அந்தோ! இவர்களது அறியாமைக்கு மிக்க வருந்துகிறோம்.

பெரியோர்களிடம் எப்போதும் பக்தியோடு நடந்து வந்தால் இவ்வுலகில் நல்ல பெயரும் அவர்கள் ஆசீர்வாதமும் பெறுவோம். அவர்கள் புத்திமதிப்படி நடந்தால் இம்மை மறுமைப் பலன்களையடைவோம்.

17. பெற்றோர்:—நமது தாய் தந்தையர்கள் நம்மால் பெரியோராகக்கருதப் படவேண்டியவர்கள் என்பதோடு அவர்கள் நமக்குத் தெய்வம்போன்றவர்கள்; தாய் தந்தையர் நமக்குச் செய்த நன்மைகளை மீண்டு கூற இடமில்லை, மேலும் அவை நாம் அறிந்தவைகளே. அவர்கள் செய்ததற்கு நாம் ஈடுசெய்வது ஆகாதகாரியம். "திரிலோகங்களையும் ஜெயித்து அவர்கள் பாதங்களில் காணிக்கையாக வைப்பினும் அவர்கள் ஒரு நாள் நமக்குப் பட்டபாடுகளுக்கு ஈடாகாதென்று ஆன்றோர் அருளிப் போந்தனர்.

நாம் எத்தகைய துன்பங்களை யிழைத்தாலும் உடனே மறந்து விட்டு நமதுக்ஷேமத்தையே யெப்போதும் கோரக் கூடியவர்கள் தாய்தந்தையரை யன்றி உலகில் வேறு யாருமில்லை. அதிலும் தந்தையெனினும் நாம் நல்வழியில் நடக்காததற்கு ஒரு சமயம் நம்மேல் வெறுப்படையலாகும்; தாயோ ஒருபோதும் வெறுப்படையாள்.

அந்தோ! அத்தகைய தாய்தந்தையரையே யிக்காலத்தில் அனேகர் அலட்சியம் செய்கிறார்கள். அவர்கள் மனம் நோகச்செய்து பெரும்பாதகத்திற் காளாகிறார்கள். அவர்கள் மனதைச் சந்தோஷப் படுத்தாமல் ஒருவன் எத்தகைய தானதருமங்களைச் செய்தாலும், புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்தாலும் ஒருபயனுமில்லை. அவன் செய்யும் புண்ணியங்க ளனைத்தும் அடியில் துவாரங்களை யுடைய குடத்தில் பாலையூற்றிவிட்டு அது பசிவேளைக்குதவு மென்று கருதுவதுபோ லாகும். ஒருவன் தன் பெற்றோரிருந்ததைவிடத் தான் அதிக மேலான செல்வம் பொருந்திய நிலையை யடைந்தாலும், மேலான கல்வியைப் பெற்றிருந்தாலும், பெற்றோரை மட்டும் எள்ளளவும் அலட்சியம் செய்யாமல் சிறப்பாகவே நடத்தி அவர்கள் மனம் எள்ளளவு வருத்தமு மடையாவண்ணம் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

"தாய் தந்தையரிடம் பக்தியோடு நடந்துகொண்டு அவர்களைச் சந்தோஷிப்பிப்பவன் எனக்கு மிக்க அன்பனாகிறான்" என்று பகவான் கூறியிருக்கிறார். "தாய் தந்தையருக்கு வெறுப் புண்டாகும்படி நடந்து கொள்கிறவனை நானும் வெறுத்து விடுகிறேன்; என்னைப் பூசிக்காவிடினும் தாய்தந்தையர்களைப் பூசிக்கிறவன் எனக்குகந்தவ னாகிறான்" என்று குர் ஆனில் ஆண்டவன் கூறியிருக்கிறார். ஏசுக்கிருஸ்து "உன் பெற்றோரைக் கன்னியப்படுத்து" என்று கூறியிருக்கிறார்.

ஆகையால் நண்பர்களே! ஈசுவரனுக்குப் பயந்தேனும், உங்கள் தாய் தந்தையரை மரியாதையோடும் விசுவாசத்தோடும் நடத்துங்கள். அவர்கள் மனம் நோகாமல், அவர்களுக்கு உங்கள்மேல் சந்தோஷ முண்டாகும் வண்ணம் நடந்து கொள்ளுங்கள். (தொடரும்)

சீடன்.

---

## புதிதாய்ச் சந்தாவில் சேருவோருக்கு அறிவிப்பு.

இப்போது வி-பி. யனுப்பினால் ரிஜிஸ்டர் செலவோடு தபால் கூலியும் இரண்டத்தனை யாதலால், இனி வி-பி-யில் அனுப்பும்படி எழுதுவோர்க்கு ஆடிமாத சஞ்சிகை ஒன்றுமட்டுமே முதலில் அனுப்பப்படும். பணம் வந்த பிறகு மற்றவை யனுப்பப்படும். முதலில் முன் சஞ்சிகைகளைச் சேர்த்தனுப்பினால் வி-பி. வாபீஸாகிவரின் நமக்கு அதிக கஷ்டம் நேரிடும்.

முன்பணமனுப்பிப் பெற்றுக் கொண்டால் செலவு குறைவதோடு சென்ற சஞ்சிகைகள் பூராவும் ஆலசியமின்றி முதலிலேயே வந்து சேரும் என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

அச்சியற்றிய மேல்விலாசத்தில் பெயரின் முன்னிருக்கும் நம்பரோ காயமான சந்தா நம்பர் என்பதையும், கையெழுத்தால் எழுதி வருமட்டும் காயமான நம்பரல்ல வென்றும் சந்தாதாரர் அறியவேண்டும்.

---

பத்திராதிபர்.

# மாதர் நெறிகள்.

(232-ம் பக்கத்தொடர்ச்சி)

18. உலோபம்.—பெரும்பாலும் மாதர்களிடம் இந்த உலோபம் என்ற இழிகுணம் இருப்பது யாவருமறிந்ததே; சாதாரணமாய் மாதர்கள் குடும்ப விவகாரங்களில் சிக்கனத்தோடு நடந்துகொள்ள வேண்டியது அவசியம். சிக்கனத்திற்கும், உலோப குணத்திற்கும் மிக்க வித்தியாசமிருக்கிறது.

சிக்கனம்.—என்பது நாம் செய்யவேண்டிய செலவுகளை யளவோடு செய்வதும், வீணான செலவுகளையும் அளவுமீறிய செலவுகளையும், வருமானத்திற்கு மிஞ்சிய செலவுகளையும் நிவர்த்தி செய்வதும், வீட்டிலுள்ள பண்டங்களை வீணாகச் சேதாரமடைய வொட்டாது எதிர் காலத்திற்கு வேண்டுமென்ற நோக்கத்தோடு சாக்கிரதையாகச் செலவழிப்பது மாகிய நடக்கையாகும்.

உலோபகுணம்.—என்பது நம்மிட முள்ள பொருளை யொருவருக்குக் கொடுக்கவும், தருமம் செய்யவும், அன்னியருக்கு உணவு முதலியவற்றை யளிக்கவும் மனம் பிடிக்காத குணமாம்.

சிக்கனம் நல்ல பெயரையும் நல்லபயனையும் அளிக்கத்தக்கது; உலோபம் கெட்டபெயரையும், கெட்ட பலனையும் அளிக்க வல்லது. உலோபகுணம் பாவத்தையும் உண்டாக்குகிறது. எவ்வாறெனில் சிலமாதர்கள் தங்கள் கணவர்கள் ஒருவனுக்குக் காசிக்குப்போக வழிச்செலவுக்குப் பணம் அளிக்கக்கருதினால், "அவனுக் கென்னகேடு; அவனுக்கேன் பத்துரூபாய்கொடுக்க வேண்டும். அந்தப் பத்துரூபாய்க்கு நான் கேட்டேனே அந்தப் பட்டுப் புடவையை வாங்கித்தாரும்" என்று அத்தருமத்தைத் தடுத்து விடுகிறார்கள். "ஒரு பரதேசி வந்திருக்கிறார், அவருக்கு நாளைக்கு நமது வீட்டில் அன்னமளிக்க எண்ணி யிருக்கிறேன்" என்று கணவன் கூறினால், "சரிசரி, சாமியார் என்று வருகிறவனுக் கெல்லாம் இது மடம்போ விருக்கிறது. வருகிறவனுக் கெல்லாம் வடிச்சிக்கொட்ட இங்கு ஆள்காரியல்ல நான். என்னாலாகாது; யாரையாவது வைத்து ஆக்கிப்போடச் சொல்லு" என்று கடுகடுப்பாய்க் கூறிவிடுகிறார்கள். அந்தோ! இத்தகைய காரியங்கள் அம்மாதர்களுக்குப் பெரும் பாபத்தை விளைவிக்கத் தடையில்லை. ஈவோரைத் தடுப்பதே பாதகம். தம் கணவரைப் புண்ணியம் செய்யவொட்டாமலும் இவர்கள் தடுத்து விடுகிறார்கள்.

"கணவன் என் மனைவியின் வார்த்தையை இலட்சியம் செய்யாமல் தான் கருதிய புண்ணியகிருத்தியங்களைச் செய்யலாகாது?" என்றகேள்வி யுண்டாகலாம். உலகில் பெரும்பாலோர் தங்கள் பிரியப்படி மனச்சாட்சிக்குச் சரியான காரியங்களைச் செய்வதை விட்டுக் கண்மூடித்தனமாய் மாதரின்

வார்த்தையையே வேதவாக்காய் மதித்துத் தங்கள் மனதிற் கொவ்வாவிடினும் அவர்கள் வாக்கின்படியே நடக்கிறார்கள் என்பது அனுபவம்.

பெண்வழி யொழுகுவதே பெரும்பாலார் இயற்கையாக விருக்கிறது. ஆயினும் இத்தகைய விஷயங்களி லெல்லாம், மாதரின் அபிப்பிராயத்தைச் சற்றும் எதிர்பாராமல், தமது புத்திக்குத் தோன்றுகிறபடியே நடக்கும் அறிவாளிகளும் அனேகர் உளர்; அத்தகைய கணவன் மனைவி இருவருக்கும் நல்லபெயரும் புண்ணியமும் கிடைக்கின்றன. உலோபகுணமுள்ளமாதர் அன்னியர் தமது குணத்தை யெப்படியும் உணர்ந்து தங்களை யிகழ்ந்தே கூறுகிறார்கள் என்பதை யுணர்வதில்லை. புகழும் புண்ணியமும் பெறவிரும்பும் மாதர் இத்தகைய குணத்தை யடியோடு விட்டொழிக்க வேண்டும்.

பந்தியில் பரிமாறும்போது தமது சுற்றத்தார்க்கு ஒரு விதமாகவும், அன்னியர்க் கொருவிதமாகவும் பங்கிடுகிற குணமும் சில மாதர்களிடம் காணலாம். இதுவும் ஒரு பெரும்பாதக நடக்கையேயாகும்.

19. ஓய்வுகாலம்.—குடும்ப வேலைகளைச் செய்தபின் பகற்காலங்களில் ஓய்வாயிருக்கும் போது அண்டை அயலிலுள்ள மாதர்களைக் கூட்டிக்கொண்டு ஊர்ச் சங்கதிகளைப் பேசுதல், தாயம், சொக்கட்டான் முதலிய ஆடுதல் ஆகிய இத்தகைய வழக்கம் அனேக மாதர்களிட முண்டு; இவர்கள் வீண்பேச்சுகளைப் பேசும்போது இவர்களருகில் உட்கார்ந்து இவர்கள் சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண் டிருக்கும் சிறு பெண்கள் வயது வருமுன்பே தங்கள் வயதிற்குத்தகாத அனேக விஷயங்களை யுணர்ந்து கொண்டு அளவு கடந்துபேசக் கற்றுக்கொண்டு சீக்கிரத்தில் "அப்பா! அந்தப்பெண்ணு, பெரியவாய்ப்பட்டி" என்று பெயரெடுக்கின்றனர்.

அந்தோ! இவர்களுக்குத் தகுதியான கல்வி கற்பித்து ஓய்வுகாலங்களில் தேவார திருவாசகம், ஆண்டவனது பிரபாவங்களையும், நல்லொழுக்கம், நீதிகள் முதலியவைகளையும் போதிக்கும் நூல்களை வாசித்தல், தம் மக்களுக்குத் தாய்ப்பாஷையைக் கற்பித்தல், தையல் முதலிய வேலைகளைக் கற்பித்தல், ஆகிய இத்தகையவேலைகளில் அக்காலங்களைச் செலவழிக்கும்படிச் செய்ய வேண்டும்.

(தொடரும்)

சீடன்.

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(159-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவ்விஷடியே இதுகாறும் நடந்த தபால் களவுகளனைத்தும் ஏககாலத்தில் ஆனந்தலிங்கின் மனதில் பகல் வெளிச்சம்போல் தெரிந்து விட்டன. இத்தகைய சில்லரைக் களவுகள் அனேகம் நடந்திருக்கின்றன. நவீனபுரியி லிருந்து அமலாபுரம் வரையிலுள்ள தபால் ஆபீஸ்களில் ஒன்

நிற்றவிராமல் களவு நடந்திருக்கிறது. ஒவ்வொரு தபாலாபீஸிலும் நான்கு முறை ஐந்துமுறை களவுபோ யிருக்கிறது.

கடந்த ஒருவருடமாய்த் துரைத்தனத்தார் ஒவ்வொரு தபாலாபீஸிலுங் கெட்டிக்காரரான துப்பறிபவர்களை மிக்க ஜாக்கிரதையோடு காவல் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்களால் கூடிய சாமார்த்திய மெல்லாம் உபயோகப் படுத்திப்பார்த்தும் சற்றுவது உளவு கண்டு பிடிக்க முடிய வில்லை. ஏனெனில் கடைசியில் ஆனந்தஸிங் இந்த எல்லாத்தபால் களவு களையும் கண்டு பிடிக்கவேண்டு மென்று கடவுள் அமைப்பிருக்கிறது.

நமது அம்பலவாணன் இத்துஷ்டர்களுடைய விரோதத்தை யெவ் வாறோ சம்பாதித்துக் கொண்டான்; ஆகையால் தபால்பையை யவன் வீட் டில்வைத்து அவன்மேல் இந்த அபாண்டமான குற்றத்தைச் சுமத்தினார்க ளென்று ஆனந்தஸிங் தெரிந்து கொண்டான். இதுமட்டுமல்ல. இத் தபால் கொள்ளையடிப்போர் இவர்கள் மட்டுமல்ல. ஒரு கூட்டமே யிருக்கிறதென் றும், இந்த இரண்டு துஷ்டர்களும் அக்கூட்டத்தின் தலைவர்க ளென்றும், இவர்கள் குறிக்கும் காலத்தில் அக்கூட்டத்தார் இந்த விடத்தில் வந்து ஆயத்தமா யிருக்கிறார்கள் என்றும், இவர்கள் பணம் கிடைக்கக் கூடிய தபாற்பையை யெடுத்து எறிந்து விடுகிறார்களென்றும், யாவும், அவன் மன தில் தெளிவாய் ஒரு அய்யமுமின்றி விளங்கிவிட்டன.

இவையாவும் ஏககாலத்தில் மனதில் பட்டதே நாம் யாவும் கண்டு பிடித்துவிட்டோம் என்று அவன்மனதில் சந்தோஷ முண்டாயிற்று. அந்தோ! அச்சமயத்தில் தான் நாம் முன்கூறிய ஆபத்து நேர்ந்தது. தன் எதிரி யாரென்று அவனுக்குச் சரியாய்ப் புலப்படவில்லை. ஆனால் அவன் தன் கால்களைப் பிடித்துப் புரட்டிய மாதிரியால் தன்னை வண்டியின் மேற் பரப்பிலிருந்து புரட்டி வெளியில் தள்ளிவிடப் போகிறான் என்று தெரி ந்து கொண்டான். ஆகையால் மிக்க சாமார்த்தியத்தோடு பக்குவமாய்த் திரும்பி, இரங்கநாதனுடைய இடுப்பைக் கெட்டியாய்ப் பற்றினான். இரண் டொரு நிமிடங்களில் மிக்க தந்திரமான மல்யுத்த சாமார்த்தியத்தால் ஆனந்தஸிங் தன் எதிரியை மல்லாக்கப் புரட்டி யழுத்திக் கொண்டான்.

இப்போது இவர்கள் இருவர் நிலைமையும் அபாயகரமானதே— சற்று தவறினால் இருவரும் வண்டிக்கப்புறம்போய் விழுந்து மடிவார்கள். ஆயினும் இருவரும் ஒருவரை யொருவர் தளரவிடாது பிடித்துக்கொண் டிருந்ததால், இருவரும் வண்டியைக் கடந்து செல்லாமல், வண்டிக் குள்ளேயே யிருக்கும் தாழ்வாரம் போன்ற விடத்தில் விழுந்தார்கள். அதில் தெய்வசங்கல்பத்தால் ஆனந்தஸிங் கீழே யகப்பட்டுக் கொண்டதால் சற்று பிரமித்து விட்டான். மேலே விழுந்த இரங்கநாதன் சற்றுவது அசுகமின்றித் தப்பித்துக் கொண்டான்.

இவர்கள் இருவரும் விழுந்த அதேநிமிடம் சாமிநாதன் அங்கு வந்தான். வண்டியின் மேல்பரப்பில் நடந்த சச்சரவு அவன் செவியில் விழுந்தது. இருவரும் ஒருவரை யொருவர் கட்டிக்கொண் டிருந்ததைக் கண்டதே இரங்கநாதனைச் சலபமாய் விடுவித்து விட்டு, "என்ன சங்கதி? சச்சரவு நடந்ததோ?" என்றான்.

இரங்கநாதன்:—"ஆம் ஆபத்தான சண்டை; இவன் மேல் தட்டி லேறி வண்டிக்குள் பார்த்துக்கொண் டிருந்தான். இவன் மேலேறியதை நான் தற்செயலாய்க் கண்டேன். இவன் கெட்ட எண்ணத்தோடேயே மேலேறிப் பார்த்திருக்கிறான்" என்றான்.

சாமிநாதன்:—"இவன் யாராயிருக்கும்? ஒருபக்கம் பிடி; இவனை வண்டிக்குள் இழுத்துக் கொண்டு போவோம்" என்றான்.

அவ்வாறே யிருவரும் சேர்ந்து ஆனந்தலிங்கை வண்டிக்குள் கொண்டு போனார்கள்.

ஆனந்தலிங்கோ சாமிநாதன், இரங்கநாதனுக்குத் துணையாய் வந்ததைக் கண்டதே, இருவரோடு நாம் போராடமுடியாது. தந்திரம் செய்வதே உத்தமமென்று கருதி மூர்ச்சை யடைந்தவன் போல் பாசாங்குசெய்தான். அவர்கள் பேசிய வார்த்தைகளியாவும் அவன் கேட்டான்.

ஆனந்தலிங்கை யுள்ளே கொண்டுபோனதே தீபவெளிச்சத்தில் இருவரும் அவன் முகத்தைக் கண்டமாத்திரத்தில் கோவென்றலறிப் பின்னிடைந்தார்கள். பிறகு விழித்தகண் இமிட்டாமல் சற்றுநேரம் பார்த்ததும் சாமிநாதன் பிரமித்து விட்டான். இரங்கநாதன் மட்டும் மெதுவாய் "தபாலிலாகாத் துப்பறிபவன்" என்றான்.

சாமிநாதன் "செத்தவன் எப்படிப் பிழைத்து வந்துவிட்டான்?" என்றான்.

இரங்:—இவனுக்கு இரண்டு மூன்று உயிர்கள் இருக்கின்றனபோலும்.

சாமி:—அப்படித்தானிருக்கவேண்டும்; இன்றேல் அந்தச் சாலகத்திலிருந்து எப்படி வெளிவந்தான்?

அதன் பிறகு இரங்கநாதன் குனிந்து சற்றுநேரம் நன்றாய் உற்றுப் பார்த்து "ஆம் ஆம், அவனே; ஒரு சந்தேகமுமில்லை. இவன் மடிய வேண்டியதே; நாங்கள் சண்டையிட்டதை வேறுயாரேனும் கண்டார்களோ?" என்றான்.

சாமி:—இல்லை இல்லை; யாரும் பார்க்கவில்லை.

இரங்:—"மிக்க நல்லதாயிற்று; இந்தத்தரம் இவன் தப்பாமல் மடியவேண்டும். தெரிகிறதா சாமிநாதா," என்று தன் கண்களில் ஒருவிதப் பிரகாசத்தோடு கூறினான்.

சாமி:—ஆம் ஆம்.

இரங்:—"ஐந்து மைல்களுக்கப்பால் வழியில் ஒரு பெரும் பள்ளத்தின் மேல் வண்டி போகிறதல்லவா? அந்த இடம் வரும்போது எனக்குக் கூறு; அதில் தள்ளிவிடுகிறேன். நமது இரகசியம் அப்பாதாளத்தில் பத்திரமா யிருக்கும்" என்றான்.

இத்துஷ்டர் பேசிக்கொண்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் நமது ஆனந்தலிங்கின் செவிகளில் விழுந்தன. அவன் உளம் நடுங்கியது; ஆனால் கடவுளின் அமைப்பு அவ்வாறில்லை. அவனைத் தனியே விட்டுவிட்டு இரண்டொரு நிமிடங்கள் கழித்துப் பாதாளம் நெருங்கிய சமயம், அவனைத் தூக்கிக்கொண்டுபோக வந்தார்கள். அதற்குள் ஆனந்தலிங் மாயமாய்ப் போய் விட்டான்.

அதைக் கண்ட அத்துஷ்டக் கள்ளருடைய மனம் எம்மாதிரி யிருந்திருக்கு மென்பதை யிதை வாசிப்போரே அறிந்து கொள்ளலாகும். முன்பு அவன் சாமிநாதன் வீட்டில் வந்து பதுங்கியிருந்ததை யறிந்தபோதே அவன் தங்கள் குற்றத்தைக் கண்டறியவே வந்தான் என்று நடுக்கங்கொண்டு விட்டார்கள். இப்போதோ அவன் தங்கள் குற்றத்தைப் பிரத்தியட்சமாய்க் கண்டு விட்டான் என்று நினைக்கப் பூரணமான காரணமிருக்கிறது; ஏனெனில் சாமிநாதன் பையையெடுத்து வெளியி லெறியும்போது அவன் மேலிருந்து பார்த்துக்கொண் டிருந்தான், என்பது கள்ளர் இருவர்க்கும் புத்தியிற் பட்டு விட்டது.

இனி யவர்கள் தப்பவேண்டியதற்கு ஒரேவழிதா னிருக்கிறது. அதாவது தபாலாபீஸ் துப்பறிபவன் மடியவேண்டும்; வேறுவழியில்லை. விடியற்காலம் வண்டி மேலையூர் ஸ்டேஷன் சேர்ந்தது. அங்கு வேறொருமெயில் ஏஜென்ட்வந்து சாமிநாதனை விடுவித்துவிட அவனும் இரங்கநாதனும், வண்டியிலிருந்து இறங்கி விட்டார்கள். இரங்கநாதன் ஸ்டேஷனில் இறங்கியதும் மிக்க ஜாக்கிரதையோடு ஆனந்தலிங்கிற்காக எதிர்பார்த்திருந்தான். ஆனால் ஆனந்தலிங் அங்கு இறங்கவில்லை. கடைசியில் வண்டி புறப்பட்டுப் போய்விட்டது. இனி அவ்வண்டி எங்கும் நிற்காமல் நவீனபுரி போய்ச் சேர வேண்டியதே.

அப்படி யிருந்தும் ஆனந்தலிங்கினுடைய அதிகாரத்தால் பக்கத்திலுள்ள ஸ்டேஷனிலேயே வண்டி நிறுத்தப்பட்டு ஆனந்தலிங்கு இறங்கி விட்டான். பிறகு ஒருமணிக்குள் வந்த எதிர்வண்டியிலேறி அவன் மேலையூர் வந்து சேர்ந்தான்.

அங்கு வந்தவுடனே ஆனந்தலிங் ஒரு விநாடிகூட ஆலசியம் செய்யாமல் அவ்வூர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் சென்று சாமிநாதன் வீட்டை இரவும் பகலும் ஒரு விஞடிதப்பாமல் பார்வையில் வைக்கும்படி ஏற்பாடு செய்து விட்டு அங்கிருந்து இரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் ஆபீஸுக்குச் சென்றான்.

அவன் ஸ்டேஷன் மாஸ்டரை நோக்கி, "இங்கிருந்து அரசஞ்சாலைத் திருப்பம் வரையில் பாதை யெப்போது காலியாயிருக்கும்?" என்றான்.

ஸ்டேஷன் மாஸ்டர் வியப்படைந்து "மூன்று மணிக்குமேல் ஐந்து மணிவரையில். ஒரு வண்டி எதிர்ப்பக்கமிருந்து ஐந்து மணிக்கு இங்குவருகிறது" என்றான்.

ஆனந்தலிங்:—அப்படியானால் அந்த விடம் இங்கிருந்து ஒருமணி ஓட்டத்திலிருக்கிறது.

ஸ்டேஷன் மாஸ்டர்:—ஆம்.

ஆனந்தலிங்:—இங்கிருந்து ஒரு வண்டியும் ஒரு எஞ்சினும் அவ்விடத்திற்குப்போய் வர என்ன செலவு பிடிக்கும். (தொடரும்)

ஆரணி குப்புசாமி முதலியார்.

---

## பொது விஷயங்கள்.

சிரங்கிற்கு மருந்து.—சிரங்கிற்குக் கீழ்க்கண்ட மருந்தை உபயோகித்தால், வெகு சீக்கிரத்தில் குணமாகின்றதென்று ஓர் வைத்தியர் கூறுகிறார்.

தேங்காய் எண்ணெயை நெருப்பனலில் நன்றாய்க் காயவைத்து, அதில் கொஞ்சம் கருப்பு பிளாஸ்திரி மருந்தைப் போட்டால், அது உருகி எண்ணெயோடு சேர்ந்துவிடும். பிறகு அதை அடிக்கடி உபயோகித்து வந்தால், மூன்று நான்கு தினங்களுக்குள் சிரங்கு ஒழிந்துவிடும்.

பழைய கார்க்குகளைப் புதிதாகச் செய்தல்.—கார்க்குகள் பழையனவாகிவிட்டால், அவற்றைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அதற்கு, அவற்றை அரைமணிநேரம் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைக்கவேண்டும்.

தூக்கம் வருவதற்கு.—அநேகர் சரியானபடி தூக்கமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் முகம் கை கால்களை ஜலத்தால் சுத்தம் செய்து கொண்டு, வெந்நீராவது பாலாவது குடித்துப் படுத்துக்கொண்டால், உடனே தூக்கம்வருமென்று சொல்லப்படுகிறது. (ஜ-ரி)

இளவரசர் வருகை.—நமது கருணை பொருந்திய சக்கிரவர்த்தியவர்களின் மூத்தபுத்திரராகிய இளவரசர் 1922ளு ஜனவரிமீ 13உ காலை சென்னைத் துறை முகத்தில் வந்திறங்குவார். அவர் ஜனவரிமீ 17உ வரையில் இங்கு தங்கியிருந்து 17உ இரவு பெங்களூருக்குப் பிரயாணமாவார்.

போகிப் பண்டிகை பொங்கற் பண்டிகைகளின் விவரம்.—ஒரு வருஷத்தில் உத்தராயணமென்றும், தக்ஷணாயனமென்றும் இரண்டு அயனமுண்டல்லவா? அவற்றுள் உத்தராயணமாவது சூரியன் வடபாதிக் கோளத்தைச் சார்ந்த மகரமுதல் மீனமீறாகிய ஆறு ராசிகளில் சஞ்சரிக்குங்காலம்; தக்ஷணாயனமாவது தென்பாதிக் கோளத்தைச்சார்ந்த கர்க்கடக முதல் தனுசு

ஈருகிய ஆறுராசிகளில் சஞ்சரிக்குங்காலம். அயனம்=சஞ்சாரம்; உத்தரம் =வடக்கு; தக்ஷணம்=தெற்கு. நம்முடைய ஒருவருஷம் தேவதைகளுக்கு ஒருநாள்; ஆகையால், உத்தராயனம் பகலும், தக்ஷிணயனம் இரவுமாகும். இராக்காலத்தின் கடைசிமுகூர்த்தம் பகற்காலத்துக்கு விடியற்காலமானது போல், சூரியன் தனுசில் சஞ்சரிக்குங் காலமாகிய மார்கழிமாதம் உத்தராயனமாகிய பகலுக்கு விடியற்காலமாகின்றது; ஆனதனல், இந்தமாத முழுதும் விடியற் காலத்தில் நீராடிக் கடவுளைப் பூசித்துத் தோத்திரஞ் செய்வது விசேஷமென்று சாஸ்திரம் சொல்லியபடி, இத்தேசத்தில் தேவாலயங்களிலும், கிருகங்களிலும், பூசைகளும், உச்சவங்களும் நடந்துவரும். இந்தமாத முழுதும் விரதமிருந்தவர்களுக்கு இஷ்டம் நிறைவேறி யிருப்பதாகப் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட விசேஷ மாதத்தின் கடைசியாய், இஷ்டசித்தி பெற்ற நாளாயிருப்பதனல், இந்த நாளுக்குப் போகி என்று பெயர் உண்டாயிற்று. போகத்திற்கு இடமான காலம் போகி. போக மென்பது சுகத்தை அனுபவித்தல்; அன்றைக்கு விடியற் காலத்தில் பெருந்தீக் கொளுத்திக் குளிர்காய்வதும், தப்பட்டைகளைக் கொட்டுவதும் இழிந்தவர்களுடைய வழக்கம். இது ஆதாரமற்றது. இந்த நாளில் ஆலயங்களில் சிறப்பான திருவிழா நடக்கும். மாளிகைகளிலும் உணவு வகைகள் பணியார வகைகளோடு இஷ்டரும் தாமும் விருந்து கொண்டாடுவார்கள்.

பொங்கற் பண்டிகை என்பது உத்தராயனத்தின் முதனள். அன்றைக்குத்தான் சூரியன் வடபுறம் திரும்புகிருன். இத்தேசத்தில் இதற்கு முந்திய காலமெல்லாம் விளைவுகாலமா யிருந்து, இக்காலமே தானியங்களை அறுத்துச் சேர்க்கிற காலமா யிருப்பதனல் சூரியன் மூகாந்தரமாய் விளைவுக்கு வேண்டிய மழை முதலானதைப் பெய்வித்து க்ஷேமத்தை உண்டாக்கின கடவுளுக்கு உபசாரமாய் முதலில் அறுத்த தானியத்தின் அரிசியைப் பாலும் வெல்லமும் சேர்த்துச் சமைத்துப் பழ முதலிய சிறப்போடு சூரியனுக்கு அல்லது சூரியமண்டலத்தில் எழுந்தருளி யிருக்கிற கடவுளுக்குப் படைத்துப் பந்துக்கள் முதலானரோடு பெருநாள் கொண்டாடுவார்கள். ஞானிகளோ, இந்நாளை நினைத்துப் பரமாத்துமாவைத் தியானிப்பார்கள். இதற்கு முன்பே வீடுகளைப் பழுதுபார்த்துச் செப்பஞ் செய்து வைப்பார்கள். தை மாதம் இரண்டாந் தேதியாகிய இப் பொங்கலின் மறுநாள் உழவு முதலான சகலத்துக்கும் இந்நாட்டாருக்கு மாடுகளே விசேஷ உதவி யானதைப்பற்றி, அந்த மாடுகள் விர்த்தியடைய வேண்டுமென்னுங் கோரிக்கையினல் பகலின் மேல் பொங்கலிட்டுக் கடவுளுக்குப் படைத்துத் துதித்து மாடுகளை அலங்கரித்துக் கீத வாத்தியங்களோடு ஊர்கோலமாக வருவார்கள். பொங்கல் இடுவதினல் இந்நாட்களுக்குப் பொங்கல் என்று பெயர் வந்தது. பயிர் வளப்பத்தின் நன்றிக்காகப் பொங்கலிடு முதனளைப் பெரும் பொங்கலென்றும், மாடுகளின் வளத்துக்காகப் பொங்கலிடு மறுநாளை மாட்டுப் பொங்கலென்றும் சொல்வார்கள். செல்வமுள்ளவர்கள் மருமகன் முதலானர்க்கும், சிநேகிதர்களுக்கும், வேலைக்காரர்களுக்கும் கோடி வஸ்திரங்கள் கொடுப்பார்கள். இந்த இரண்டாநாளிரவிலும் அடுத்த நாட்களிலும் ஒருவரை யொருவர் கண்டு, "பால் பொங்கிற்ரு" என்று க்ஷேமம் விசாரித்து, தாம்பூல முதலிய உபசாரங்களைப் பெறுவார்கள். இவ்வழக்கம் பெரும்பாலும் பிராமணர்களல்லாதா ரிடத்திலேயே உண்டு. இது ஒரு முக்கியநாள்.—க. வ.

# "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

## துன்மதிஞு மாசிமீ—சாலிவாகனம் 1844—கலி 5023
## பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
## இங்கிலீஷ் 1922ஞு பிப்ரவரிமீ மார்ச்சுமீ

| மாசிமீ | பிப்ரவரி | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | ஞா | ○0-25<br>பிர 50-58 | ஆயி-0-35<br>மக-53-2 | சித்0-35ம | கும்பரவி நா 2-33<br>[கப்பட்டது |
| 2 | 13 | திங் | து41-50 | பூர-45-42 | சித்-60 | பிரயாணத்திற்கு விலக் |
| 3 | 14 | செ | திரி33-35 | உத்-39-15 | அ39-15சி | விதைவிதைக்க |
| 4 | 15 | புத | சது 26-0 | அஸ்-33-57 | ம33-57சி | மரணயோகம் |
| 5 | 16 | வியா | பஞ்20-12 | சித்-30-7 | சி30-7அ | விவாகம்செய்ய |
| 6 | 17 | வெ | சஷ்16-52 | சுவா-27-57 | சித்-60 | வித்தியாரம்பம் செய்ய |
| 7 | 18 | சனி | சப்13-45 | விசா-27-37 | சித்-60 | |
| 8 | 19 | ஞா | அ13-10 | அனு-28-57 | மர-60 | |
| 9 | 20 | திங் | நவ13-40 | கேட்-32-0 | சித்-60 | |
| 10 | 21 | செ | தச16-57 | மூல-36-25 | அ36-25சி | |
| 11 | 22 | புத | ஏச20-50 | பூரா-41-57 | அமி60 | |
| 12 | 23 | வியா | துவ25-45 | உத்-48-20 | சித்-60 | |
| 13 | 24 | வெ | திர31-35 | திரு-55-28 | ம55-28சி | |
| 14 | 25 | சனி | சது37-53 | அவி-60-0 | சித்-60 | |
| 15 | 26 | ஞா | ● 44-27 | அவி-3-5 | மர3-5சித் | |
| 16 | 27 | திங் | பிர51-5 | சத-10-50 | சித்-60 | |
| 17 | 28 | செ | து57-32 | பூரட்-18-35 | ம18-35அ | கரிநாள் |
| 18 | 1 | புத | திரி58-5 | உத்-26-5 | சித்26-5 ம | புண்ய தினம் |
| 19 | 2 | வியா | சது60-0 | ரேவ-32-55 | சி33-55அ | சாந்தசதுர்த்தி |
| 20 | 3 | வெ | சது8-47 | அசு-38-55 | அ38-55சி | நாமகரணம் செய்ய |
| 21 | 4 | சனி | பஞ்12-45 | பர-43-37 | சி43-37அ | சஷ்டிவிரதம் |
| 22 | 5 | ஞா | சஷ்15-28 | கிரு-46-47 | சித்-60 | கிருத்திகை |
| 23 | 6 | திங் | சப்-1615 | ரோ-48-10 | அ48-10சி | வித்தியாப்பியாசம் |
| 24 | 7 | செ | அ15-10 | மிரு-47-42 | சி-47-42ம | பிரயாணம்விலக்க |
| 25 | 8 | புத | நவ12-5 | திரு-45-20 | சித்-60 | மந்திரம்ஜெபிக்க |
| 26 | 9 | வியா | தச7-15 | புன-41-22 | அ41-22சி | நாமகரணம் செய்ய |
| 27 | 10 | வெ | ஏகா0-48<br>து51-5 | பூச-35-53 | மர-60 | நரசிம்ம துவாதசி |
| 28 | 11 | சனி | திர44-30 | ஆயி-29-22 | ம29-22அ | சனிபிரதோஷம் |
| 29 | 12 | ஞா | சது35-20 | மக-22-12 | ம22-12சி | ஒலிபண்டிகை,மாசிமகம் |
| 30 | 13 | திங் | ○25-55 | பூர-14-45 | சித்-60 | மீனரவி நா 55-23 |

(பிப்ரவரி column, from row 20: 1922ஞு மார்ச்சுமீ)

| | | | |
|---|---|---|---|
| கே | | | |
| பு-சு<br>கு | 10உ மகர<br>வக்புத<br>24உமீ-சுக்<br>28உ கு-புத | | |
| | செ | | ரா-ச<br>குரு |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
"ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.